
# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 4 ஏப்பிரல் — ஜூன் 1998 இதழ் 2



***வில்லியம் கேரி 1761 - 1834***

# திருமறைத்தீபம்

ISBN 1173-7255

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. எழுதிக் கேட்கும் எவருக்கும் பத்திரிகை சந்தா எதுவுமின்றி இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ஏனையோருக்கு பத்திரிகையை அறிமுகப்படுத்தி வைப்பதன் மூலம் வாசகர்களும் இவ்வூழியத்தில் பங்கு கொள்ளலாம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Tel & Fax:** 64 9 527 1522
**email:** bala@ihug.co.nz

கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக்கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கள் என்றுதான் கூற வேண்டும்.

*- சி. எச். ஸ்பர்ஜன் (1834-1892)*


# ஆசிரியருரை:

இதுவரை வாசகர்களுக்கு திருமறைத் தீபத்தை இரு பிரதிகளாக அனுப்பி வந்துள்ளோம். அநேகர் தங்கள் நண்பர்களுக்கு பத்திரிகையை அறிமுகப்படுத்தி வைக்க அது துணைபுரிந்ததே அதற்குக் காரணம். நேரடியாக எழுதிக் கேட்கும் புதிய வாசகர்களுக்கெல்லாம் பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்பி வருகிறோம். ஆனால் இவ்வருட முதல் தனிப்பட்ட முகவரிகள் அனைத்திற்கும் ஒரு பிரதி மட்டுமே அனுப்பி வைக்கப்படும். இதனைக் கடந்த இதழைப் பெற்றுக் கொண்டவர்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். பத்திரிகை செலவு அதிகரித்துள்ளதும், வாசகர்கள் எண்ணிக்கை பெருகி வருவதுமே இதற்குக் காரணம். முடிந்தவரை பத்திரிகையைத் தரம் குறையாமல் வெளியிடுவதும், கேட்டு எழுதும் அனைவருக்கும் பத்திரிகையை அனுப்பி வைப்பதுமே எங்கள் நோக்கம். ஆகவே, முடிந்தவர்கள் பத்திரிகையை விரும்பி வாசிக்கும் உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள முயற்சி செய்வீர்களானால் எங்கள் ஊழியத்திற்குப் பெருந்துணையாக இருக்கும். ஒவ்வொரு பிரதியும் வீண் போகாதவாறு நாடிவரும் அனைவருக்கும் கிடைக்கும்படியாக எம்மோடு சேர்ந்து பாடுபடும்படித் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

சமீபத்தில் [ஆகஸ்ட் 1997] ஆங்கிலத்தில் வெளியான திரு. தெய்வநாயகத்தின் "*இந்து சமயத்தில் கிறிஸ்தவம்*" என்ற நூலை இவ்விதழில் விமர்சித்துள்ளோம். இவ்விமர்சனம் நமது ஆங்கில மூலத்தின் சுருக்கம். கிறிஸ்தவத்தை எதிர்நோக்கும் ஆபத்துக்கள் அவை எங்கிருந்து வந்தபோதும் எதிர்க்க வேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவனதும் கடமை. அநேக தமிழ் கிறிஸ்தவ அன்பர்கள் இப்பேராபத்தைப் புரிந்து கொள்ளாமல் இதற்கு இரையாகிக் கொண்டிருக்கின்றனர். வேதத்தைப் புறக்கணித்து விட்டு ஒருவரும் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளமுடியாது. அது கிறிஸ்துவுக்குப் பொறுக்காது. இனப்போராட்டத்தின் பெயரில் வேதபூர்வமான கிறிஸ்தவத்தை அழிக்க முனையும் இப்போதனைக்கு சுவிஷேச கிறிஸ்தவர்கள் இடம் கொடுத்தலாகாது. இதனை வாசிக்கும் அன்பர்கள் ஏனையோருடனும் பகிர்ந்து கொண்டு அவர்களைக் காக்க முற்படுங்கள். கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் [மத்தேயு 7:15] என்ற கர்த்தரின் வார்த்தையை நாம் எல்லோரும் நினைவு கூறுவோம்.

**பழைய ஏற்பாடு வேதத்தின் ஒரு பகுதி. அதிலிருந்து பிரசங்கம் செய்ய வேண்டியது மிக மிக அவசியம். ஒரு கண்ணோடு மட்டும் எப்படி வாழ முடியாதோ அதேபோல் பழைய ஏற்பாடு இல்லாமல் வாழ முடியாது. இவ்விதழில் ஜெப்ரி தோமஸ் அதன் அவசியத்தை வலியுறுத்திக் காட்டுகிறார்.**

# பழைய ஏற்பாட்டிலிருந்து பிரசங்கிப்பது ஏன் அவசியம்?



ஜெப்ரி தோமஸ்

### 1. இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டிலிருந்தே பிரசங்கித்தார்

எல்லாவிதமான சந்தர்ப்பங்களிலும் இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டிலிருந்தே பிரசங்கம் செய்தார். தான் பிசாசினால் சோதிக்கப்பட்ட போதும், தனது எதிரிகளுக்குப் பதிலளித்த போதும், தன்னை விசுவாசிக்கும்படி மக்களை அழைத்தபோதும், தனது விசுவாசத்தை வலியுறுத்தவும், முக்கியமாக தமது பிரசங்கத்திற்கும் கிறிஸ்து பழைய ஏற்பாட்டையே பயன்படுத்தினார். பழைய ஏற்பாட்டின் அனைத்துப் பகுதிகளையும் கிறிஸ்து தனது பிரசங்கத்தில் பயன்படுத்தியுள்ளார். நமது ஆண்டவரின் பிரசங்கங்களில் பத்துவிகிதமானவை பழைய ஏற்பாட்டு நூல்களில் இருந்தே கொடுக்கப்பட்டன. இன்று அநேகர் கேள்விக்குரியதாகக் கருதும் பகுதிகளில் இருந்தும் அவர் பிரசங்கித்துள்ளார். உதாரணமாக ஆதியாகம் 2, நோவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளம், லோத்து சோதோமை விட்டுப் போகுதல், லோத்தின் மனைவி உப்பாக மாறுதல், யோனாவை மீன் விழுங்குதல் அத்தோடு நினிவே மக்கள் மனந்திரும்புதல் ஆகிய பகுதிகளை அவர் பயன்படுத்திப் பிரசங்கித்துள்ளார். இயேசு கிறிஸ்து ஐந்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை நேரடியாக பெயரைக்குறிப்பிட்டு எடுத்துக் காட்டியுள்ளார்.

### 2. அப்போஸ்தலர்களும் பழைய ஏற்பாட்டிலிருந்தே பிரசங்கம் செய்தனர்.

பெந்தகோஸ்தே நாளில் யெருசலேமில் நிகழ்ந்த மற்ற எல்லா நிகழ்சிகளையும்விட மேலானதாக இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களில் ஒருவரான பேதுருவின் பழைய ஏற்பாட்டிலிருந்து கொடுக்கப்பட்ட பிரசங்கம் அமைந்திருந்தது. பேதுரு பழைய ஏற்பாட்டை சாதாரண மனிதர்களின் வார்த்தைகளாகக் கருதாமல், அவற்றை "தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" என்று கருதினான் *(2 பேதுரு 1:21)*. இதேபோல் பவுல் அப்போஸ்தலனும் பழைய ஏற்பாடு "தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று நம்பினார் *(2 தீமோத்தேயு 3:16)*. ரோமில் இருந்த அந்நியர்களைக் கொண்டதாக அமைந்திருந்த சபைக்கு எழுதிய நிருபத்தில், "முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" என்று குறிப்பிட்டார் *(ரோமர் 15:4)*. வனாந்தரத்தில் இஸ்ரவேலர்கள் மேல் வந்த கர்த்தரின் நியாயத்தீர்ப்பைப்பற்றி பவுல், கிரேக்கர்களை அதிகமாகக் கொண்டமைந்திருந்த கொரிந்து சபைக்கு எழுதிய நிருபத்தில், "இவைகளெல்லாம் நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டிருக்கின்றது" என்று கூறியுள்ளார். *(1 கொரி. 10:11)*.

### 3. புதிய ஏற்பாட்டைவிட பழைய ஏற்பாட்டிலேயே சில சத்தியங்கள் முழுமையாக விளக்கப்பட்டுள்ளன.

படைப்பின் மூலம் அண்ட சராசரங்கள் எல்லாவற்றினதும் ஆரம்பம் பற்றி பழைய ஏற்பாட்டிலேயே முழுமையாக விளக்கப்பட்டுள்ளன. மனிதனுடைய படைப்பு, ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான உறவு, திருமண பந்தம், மனைவி ஏன் கணவனுக்கு கீழ்ப்படிந்து, அவனது தலைமையை ஏற்று நடக்க வேண்டும் என்பவை பற்றிய

உண்மைகள் பழைய ஏற்பாட்டிலேயே பூரணமாக விளக்கப்பட்டுள்ளது. பாவத்தின் தன்மை, அது எவ்வாறு உலகிற்குள் நுழைந்தது, மனிதனது வீழ்ச்சி என்றால் என்ன? கடவுளுக்கும், மனிதனுக்கும் இடையில் காணப்படும் இடைவெளிக்குக் காரணம் என்ன? அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் யாவை என்பதற்கான முழு விளக்கமும் பழைய ஏற்பாட்டிலேயே தரப்பட்டுள்ளது. கடவுளின் தன்மையும், அவரது குணாதிசயங்களும், வல்லமையும், பரிசுத்தமும், அவரது தன்மைக்கு முரணான பாவத்திற்கு எதிரான அவரது கோபம் ஆகியவை பழைய ஏற்பாட்டிலேயே விளக்கப்பட்டுள்ளன. கடவுள் மனிதனோடு தான் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையிலேயே செயற்படுகிறார் என்பதையும், வரப்போகும் மேசியா பற்றிய வாக்குத் தத்தத்தையும், லேவிய பலியீடுகளின் மூலமாக விளக்கப்பட்டுள்ள அவரது வருகைக்கான ஆயத்தங்கள் பற்றியும் பழைய ஏற்பாடு மட்டுமே விளக்குகின்றது. கர்த்தரை நாம் எவ்வாறு சங்கீதங்களாலும், கீர்த்தனைகளாலும், ஞானப்பாட்டுக்களாலும் ஆராதிக்க வேண்டும், நமது ஸ்தோத்திரங்களின் தன்மை, அமைப்பு ஆகியவை பற்றி பழைய ஏற்பாட்டின் சங்கீதப்புத்தகம் விளக்குகின்றது. வேதத்தின் அறுபத்தி ஆறு நூல்களில் இது மட்டுமே கீர்த்தனை நூலாக உள்ளது.

### 4. பழைய ஏற்பாட்டிலேயே கிறிஸ்தவ அனுபவங்களின் தன்மை முழுமையாக விளக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்படக்கூடிய, போராட்டங்கள், சந்தேகங்கள், பிரச்சினைகள், வீழ்ச்சி, ஆவிக்குரிய மீட்சி மற்றும் கர்த்தர் நம்மைக் கைவிட்டு விட்டார் என்றெண்ணி உணர்ந்து கதரும் அனுபவம், மறுபடியும் கர்த்தருடன் ஐக்கியத்தில் வரும்போது ஏற்படும் மகிழ்ச்சி ஆகியவற்றை பழைய ஏற்பாட்டிலேயே மிக விளக்கமாகப் பார்க்கலாம். இவற்றை சங்கீதப்புத்தகத்திலும், தீர்க்க தரிசிகளிலும் காணலாம். கடவுளுடைய மக்கள் எவ்வளவு தூரம் இருதயம் கடினப்பட்டு கர்த்தருக்கு எதிரானவர்களாக மாறலாம் என்றும், அவர்களைத் திருத்துமுகமாக கர்த்தர் எந்த வகையில் அவர்களைத் தண்டித்து திருத்துகிறார் என்றும் பழைய ஏற்பாடு அற்புதமாக விளக்குகின்றது. கர்த்தர் பழைய உடன்படிக்கையின் மக்கள் தவறிழைத்த போது அவர்களைத்தண்டித்து மீட்ட அனுபவங்களில் இருந்தே நாம் எழுப்புதல் கோட்பாட்டினைப் பெற்றுக் கொள்கிறோம்.

### 5. பழைய ஏற்பாட்டின் வெளிப்படுத்தல் மூலமாகவே கர்த்தர் தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தினார்.

கடவுள் திடீரென, சடுதியாக கிறிஸ்துவின் தோற்றம், வாழ்க்கை, போதனை, மரணம், உயிர்தெழல் என்பவற்றின் மூலம் அல்லாது பழைய ஏற்பாட்டின் மூலமே முதலில் தன்னை வெளிப்படுத்தினார். புதிய ஏற்பாட்டின் மத்தேயு, மார்க்கு ஆகிய புத்தகங்களின் ஆரம்ப அத்தியாயங்கள் பழைய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களைப் பற்றியே விபரிக்கின்றன. அத்தோடு இப்பகுதிகள் இயேசு கிறிஸ்துவின் வருகையை எடுத்துக் காட்டி அதற்கு அத்திவாரமிடுகின்ற பழைய ஏற்பாட்டு தீரக்கதரிசனங்களையே விபரிக்கின்றன. கிறிஸ்துவின் அரசாட்சி, தாழ்மை ஊழியம், நித்தியஜீவன், ஆசாரித்துவம் என்பன போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையையே ஆதாரமாகக் கொண்டுள்ளதோடு, பழைய ஏற்பாட்டிலேயே அவை உயிர்பெறுகின்றன. ஆகவே, இயேசு கிறிஸ்து இவ்வுலகில் தோன்றியபோது அவர் போதிப்பதற்குத் தயாராக ஏற்கனவே இவ் வார்த்தைப் பிரயோகங்களும், போதனைகளும் தயாராக இருந்தன. கடவுள் இவ் வாறே செயற்படுவதோடு, புதிய ஏற்பாடு இயற்கையாகவே பழைய ஏற்பாட்டை ஆதாரமாகக் கொண்டு வளர்ந்துள்ளது.

பழைய ஏற்பாட்டிலிருந்து பிரசங்கம் செய்வது மிகப் பெரிய பாக்கியமாகும். நமது வளரும் இளம் சபைகளில், ஆத்துமாக்களின் ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பயன்படும்படியாக யாத்திராகமம், பத்துக்கட்டளைகள் ஆகியவற்றில் இருந்து சிறு தொடர்பிரசங்கங்கள் செய்வது பயனுள்ளதாக இருக்கும். அத்தோடு தாவீதின் வாழ்க்கை, எலியா, எலிசா, யோனா, யோசுவாவின் புத்தகம், சங்கீதத்தின் சில பகுதிகள், தானியேல், சகரியா ஆகிய நூல்களின் ஆரம்ப அத்தியாயங்கள் ஆகியவற்றில் இருந்து சிறு தொடர்களாகப் பிரசங்கம் செய்வது மிகப்பயன் தரும். இவ் வேதப்பகுதிகளில் நாம் பார்க்கக் கூடிய வாழ்க்கைமுறை, விவசாயப் பின்னணி, போராட்டங்கள் அனைத்தையும் 75% மான உலகக்கலாசாரங்களில் இன்று பார்க்கக்கூடியதாக உள்ளது. பழைய ஏற்பாடு முடிவுக்கு வருமுன்பாக பரலோகமும், இவ்வுலகமும் அழிந்து போகும்.

பழைய ஏற்பாடு

**கடவுள் திடீரென, சடுதியாக கிறிஸ்துவின் தோற்றம், வாழ்க்கை, போதனை, மரணம், உயிர்தெழல் என்பவற்றின் மூலம் அல்லாது பழைய ஏற்பாட்டின் மூலமே முதலில் தன்னை வெளிப் படுத்தினார்.**

# பழைய ஏற்பாடு

**பழைய ஏற்பாடு**

***அநேக போதகர்கள் பழைய ஏற்பாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளை வெறும் கதையாகப் பாவித்து கேட்பவர்கள் மகிழும் விதத்தில் போதிப்பதையும், அல்லது அவற்றைப் உவமானங் களைப்போலப் பயன்படுத்தி தமக்குத் தெரிந்தவிதத்தில் பொருள் கொள்வதையும் தான் வழக்கமாகக் கொண்டிருக் கிறார்களே தவிர வேதபூர்வமாகப் போதிப்பதில்லை.***

பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றி புதிய ஏற்பாடு பல இடங்களில் வலியுறுத்துகிறது. பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் *(2 தீமோத்தேயு 3:14-17)* “வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. . .தேவனுடைய மனிதன் தேறினவனாக இருக்கும்படியாக அவை பிரயோஜனமுள்ளவையாக இருக்கின்றது” என்று கூறும்போது, பழைய ஏற்பாட்டினையே கருத்தில் கொண்டிருந்தார். இவ்வசனங்கள் முழு வேதத்தையும் குறித்தபோதும் தீமோத்தேயுவிடம் அன்றிருந்தது பழைய ஏற்பாடு மட்டுமே. பழைய ஏற்பாட்டு வேதத்தை தீமோத்தேயு நன்கு கற்றறிந்திருந்தான். தீமோத்தேயு ஒரு போதகனாவதற்குத் தேவையான அனைத்தையும் அன்று பழைய ஏற்பாடு கொண்டிருந்தது. பழைய ஏற்பாட்டைத்தவிர அன்று தீமோத்தேயுவிற்கு வேறெதுவுமே தேவையாயிருக்கவில்லை. பழைய ஏற்பாட்டு வேதம் திருத்துவதற்கும், நீதிமானாவதற்கும் போதுமானது என்று பவுல் கூறுகின்றார்.

அத்தோடு பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவத்தைக்குறித்து இன்னுமொரு வேத பகுதியான முதலாம் கொரிந்தியரில் *(1 கொரி. 10:1-12)* பவுல் பழைய ஏற்பாட்டு பிதாக்களின் அனுபவங்கள் நமக்கு உதாரணங்களாக இருப்பதாகக் குறிப்பிடுகிறார். அவற்றைப் படித்து அவர்கள் விட்ட தவறுகளை நாமும் விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது பவுலின் போதனை. இதேபோல் இயேசு கிறிஸ்துவும் நற்செய்திப்புத்தகங்களில் பழைய ஏற்பாட்டிலிருந்து அடிக்கடி வசனங்களை மேற்கோள் காட்டி பழைய ஏற்பாட்டின் நிரந்தரமான பயனைச் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வுலகம் உள்ளவரையும் அது அழியாது என்பது கிறிஸ்துவின் போதனை.

இவற்றை ஏன் கூறுகின்றேன் என்றால், பழைய ஏற்பாட்டை இன்று போதகர்களும், கிறிஸ்தவர்களும் பயன்படுத்தும்விதம் வேதபூர்வமானதாக இல்லை என்பதை சுட்டிக்காட்டத்தான். அநேக போதகர்கள் பழைய ஏற்பாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளை வெறும் கதையாகப் பாவித்து கேட்பவர்கள் மகிழும் விதத்தில் போதிப்பதையும், அல்லது அவற்றை உவமானங்களைப்போலப் பயன்படுத்தி தமக்குத் தெரிந்தவிதத்தில் பொருள் கொள்வதையும்தான் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்களே தவிர வேதபூர்வமாகப் போதிப்பதில்லை. யோனாவைப் பற்றியும், தானியேலைப்பற்றியும், தாவீதைப்பற்றியும் மட்டும் கேட்டு அலுத்துப் போன மக்கள்கூட்டம்தான் எத்தனை! இவர்களைக் கூட பழைய ஏற்பாட்டில் கர்த்தரின் மீட்பை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றில் அவர்களின் பங்கு என்ன என்றெல்லாம் ஆராயாது, அவர்களது வாழ்க்கைச் சம்பவங்களுக்கு வெறும் பொருள்கூற முயலும் பிரசங்கங்களே இன்று அதிகம். இதேவிதமாகத் தான் சிம்சோன், தேபோராள், கிதியோன் போன்றோரின் வாழ்க்கைச் சம்பவங்களையும்பற்றிப் பிரசங்கிக்கப்படுகின்றது. சாலமோன் மிக மோசமானவன், கிறிஸ்தவனே அல்ல என்ற விதத்தில் அமைந்த பிரசங்கத்தையும் நான் கேட்டிருக்கிறேன். இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் பழைய ஏற்பாட்டினைப்பற்றிய சரியான விளக்கம் அநேகருக்கு இல்லாததுதான்.

பழைய ஏற்பாடு கர்த்தர் தன்னை வரலாற்றில் வெளிப்படுத்தியதை எடுத்துரைக்கிறது. பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் கட்டுக்கதையல்ல; அவை வரலாற்று நிகழ்ச்சிகள். கர்த்தர் ஆறு நாட்களில் உலகைப்படைத்ததையும், நோவாவின் காலத்தில் வெள்ளத்தால் உலகம் அழிந்ததையும், மோசே செங்கடலைக் கடந்ததையும், யோனாவை மீன் விழுங்கியதையும் வெறும் உவமானங்களாகக் கருதும் இறையியல் கல்லூரிகள் மலிந்த தமிழ்கூறும் நல்லுலகில் பழைய ஏற்பாடு வரலாற்று நிகழச்சி என்பதை வலியுறுத்திப் போதித்தல் அவசியம். பழைய

ஏற்பாடு உலகத் தோற்றத்தை விளக்குகிறது. இவ்வரலாற்று நிகழ்ச்சிகள் மூலமா கவே தேவன் தன்னை வெளிப்படுத்த சித்தம் கொண்டார். ஆதியில் நமது முதல் பெற்றோர் கர்த்தரின் கட்டளையை மீறிப்பாவம் செய்ததால் தண்டனையை அனுபவித்து உலகையும் பாவத்தில் ஆழ்த்தினர். இதனால் அவர்களையும் முழு மனித குலத்தையும் அழித்து விடாமல் கர்த்தர் தனக்கென ஒரு மக்களை உலகில் தெரிவு செய்து கொண்டு அவர்கள் மூலம் மனித குல விடுதலைக்கு வழிகோரி னார். பழைய ஏற்பாடு கர்த்தர் தனது ஒரே குமாரனின் மூலமாக இம்மீட்புப் பணியை எவ்வாறு கைக்கொண்டார் என்று விளக்குகின்றது. பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு சம்பவமும் கிறிஸ்துவின் மீட்புப்பணியோடு தொடர்புடையதாக உள் ளது. அதனால்தான் பழைய ஏற்பாடு அடிக்கடி வரப்போகும் மேசியாவைக் குறித்து எடுத்துச் சொல்கிறது. பழைய ஏற்பாடு மேசியாவின் வருகையை அறி விக்க புதிய ஏற்பாடு அவ்வாறு வந்த மேசியாவின் வாழ்க்கையையும், அவரது மீட்புப்பணியையும் எடுத்துரைக்கிறது.

இவ்வாறு கிறிஸ்துவின் மூலமாக தனது மக்களை விடுவிக்கும்பணியில் கர்த்தர் தன்னால் தெரிவு செய்யப்பட்ட மக்களோடு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டார். ஆகவேதான், அவர் உடன்படிக்கையின் தேவனாக உள்ளார். இவ் வுடன்படிக்கையின்படி கர்த்தர் தனது மக்களை வழிநடத்தினார். இதன் மத்தியில் தான் நியாயப்பிரமாணங்களும், நீதிச்சட்டங்களும் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப் பட்டன. பாவத்தைக்கட்டுப்படுத்தி மக்களை நேர்வழியில் நடத்த நியாயப் பிரமா ணமும், நீதிச்சட்டங்களும் அவசியமாயிருந்தன. அவற்றைக் கைக்கொண்டு நடந்த வரை அவர்களுக்கு கர்த்தரின் ஆசீர்வாதம் கிட்டியது. அவற்றை மீறியபோது கர்த்தரின் விரோதத்தையே அவர்கள் சம்பாதித்துக் கொண்டனர். பாவத்தினால் இஸ்ரவேலர் கர்த்தரை விட்டுப் பலமுறை விலகியோடியபோதும் கர்த்தரின் திட்டங்கள் எப்போதும் அழிவடையவில்லை. மாறாக மனிதர்களின் பாவத்தை யும் தனது திட்டங்களுக்காகவும், தனது மக்களின் மீட்புக்காகவும் கர்த்தர் பயன் படுத்திக் கொண்டதையும் பழைய ஏற்பாடு விபரிக்கிறது. பாவத்தின் காரணமாக பழைய ஏற்பாட்டு மக்களுக்கு நியாப்பிரமாணங்களையும், நீதிச்சட்டங்களையும் பூரணமாகக் கைக்கொள்ள முடியவில்லை. அப்பாவத்திலிருந்து விடுதலை அளித்து நியாயப்பிரமானத்தைக் கைக்கொள்ளும்படிச்செய்ய தன்னையே பலி யாகக்கொடுக்க வரப்போகும் கிறிஸ்துவையே பழைய ஏற்பாட்டு தகனப்பலிகள் நினைவுறுத்துகின்றன.

இம்மீட்புப்பணி குறித்த வரலாற்று சம்பவங்களின் மத்தியிலேயே பழைய ஏற்பாட்டில் கர்த்தரின் இறைமைத்துவத்தையும், திரித்துவ செயல்முறைகளையும் பற்றி நாம் அறிந்து கொள்கிறோம். பழைய ஏற்பாட்டு வரலாறு நமக்கு இறையிய லைப் போதிக்கின்றது. கர்த்தர், அவரது படைப்பின் மகிமை, மூல பாவம், தெரிந்தெடுப்பு, திரித்துவம், பரிசுத்த ஆவியின் செயற்பாடு, பரிசுத்தமாக்குதல், ஆராதனை முறைகள், கிறிஸ்துவின் வருகை, மீட்பின் இரகசியம், கிறிஸ்துவின் தீர்க்கதரிசி, ஆசாரியர், அரசர் ஆகிய பதவிகள் என்பவற்றைப்பற்றியும் பழைய ஏற்பாட்டிலேயே படித்துத் தெரிந்து கொள்கிறோம். ஆகவே, பழைய ஏற்பாடு உலக வரலாற்றை மட்டும் எடுத்துக் கூறும் நூல் அல்ல; வரலாற்றின் மூலமாக செயற்படும் கர்த்தரைப்பற்றியும் அவரது செயல்களையும் எடுத்து விளக்கும் நூலாகும்.

பழைய ஏற்பாடில்லாமல் புதிய ஏற்பாடில்லை. புதிய ஏற்பாடில்லாமல் பழைய ஏற்பாடில்லை. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டை நோக்கி நம்மை வழிநடத்த, புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டினை நமக்கு விளக்கிக்காட்டுகின்றது. இரண் டுமே நமது இரு கண்களைப்போல. ஆகவே, பழைய ஏற்பாட்டினை வெறும் உவமானமாகப் பயன்படுத்தி கதை சொல்லும் வழக்கத்தை விடுத்து அதை வேதபூர்வமாக முறையாகப் போதிக்கும் வழக்கத்தை கைக்கொள்வோம்.

**பழைய ஏற்பாடு**

***பழைய ஏற்பாடில்லாமல் புதிய ஏற்பாடில்லை. புதிய ஏற்பாடில்லாமல் பழைய ஏற்பாடில்லை. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டை நோக்கி நம்மை வழி நடத்த, புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டினை நமக்கு விளக்கிக் காட்டுகின்றது. இரண்டுமே நமது இரு கண்களைப் போல.***

*எந்தவிதத்திலும் கர்த்தரை சந்தேகிக்காது, எந்தவிதக் கேள்வியும் கேட்காது, அவர் சொல்லியிருக்கிறார் என்ற ஒரே மனத்திருப்தியுடன், அவருடைய வார்த்தையை ஏற்று விசுவாசிப்பவனே மிகவும் மகிழ்ச்சியுடையவனும், மெய்யான கிறிஸ்தவனுமாவான்.* - ஸ்பர்ஜன்.

# வியாக்கியானப் பிரசங்கம்

## Expository Preaching

## - 2 -

பிரசங்கம்

இன்று அநேக சபைகளில் பிரசங்கத்திற்கு மதிப்பில்லை என்பது வாசகர்கள் அறிந்த உண்மை. எதன் மூலம் கர்த்தர் தனது மக்களைத் தம்மிடம் அழைத்துக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறாரோ அந்தச் சாதனமான பிரசங்கத்தை விடுத்து வேறு காரியங்களில் நேரத்தைச் செலவிடும் பிரசங்கிகள் அநேகம். கெரிஸ்மெட்டிக் கூட்டம் இன்று பிரசங்கத்தை உதாசீனம் செய்து அற்புதங்களை நாடி ஓடி அழிந்து கொண்டிருக் கின்றது. பெனி ஹின், ரொட்னி ஹாவார்ட் பிரவுன் போன்ற போலி ஆசாமிகள் மேடைகளில் நாடகமாடி மக்களைக்கவர்ந்து பணம் பரிப்பதில் ஈடுபட்டுள்ள னர். இவர்களது மேடைகளில் வேதமோ, நற்செய்தியோ பிரசங்கிக்கப்படுவ தேயில்லை. எதைச்செய்யாவிட்டாலும் இவர்கள் பணம் கேட்பதில் தவறுவ தில்லை.

இத்தகைய சூழ்நிலையில் பிரசங்கத்தின் அவசியத்தை நாம் தொடர்ந்து வலியுறுத் தாமலிருக்க முடியாது. பிரசங்கமில்லாத சபைகள் அழிவை நாடி ஓடிக் கொண் டிருக்கின்றன. அத்தகைய சபைகள் கர்த்தரின் சத்தத்தைக் கேட்க முடியாது. அத்தகைய சபைகளில் உள்ள மக்கள் கர்த்தரின் சித்தத்தை அறிந்து கொள்ள முடியாது. கர்த்தரின் பாதையில் நடக்கமுடியாது. கர்த்தரின் அதிகாரத்திற்கு சபைகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமானால் அங்கு பிரசங்கம் இருக்க வேண்டும். அதுவும் கடந்த இதழில் நாம் வலியுறுத்தியதுபோல் வியாக்கியானப் பிரசங்கம் இருக்க வேண்டும்.

**கர்த்தரின் அதிகாரத்திற்கு சபைகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டு மானால் அங்கு பிரசங்கம் இருக்க வேண்டும்.**

வியாக்கியானப்பிரசங்கம் (Expository Preaching) செய்வது இலகுவான செய லென்று நாம் கூறவில்லை. வேறு எந்தப்பிரசங்கமுறையையும்விட வியாக்கியானப் பிரசங்க முறைக்கு அதிக நேரமும், உழைப்பும் அவசியம். இத்தகைய பிரசங்க முறையே சபை மக்களுக்கு அதிக ஆவிக்குரிய உணவை அளிப்பதோடு பிரசங்கி யையும் கட்டி வளர்க்கக் கூடியது. வேத அறிவில் பிரசங்கி வளர இப்பிரசங்க முறை துணை செய்யும். அதேநேரம் ஒவ்வொரு வாரமும் பிரசங்கத்திற்கான தலைப்பை நாடி அலைய வேண்டிய தலைவலியும் இருக்காது.

### சபை வரலாற்றில் வியாக்கியானப்பிரசங்க முறை

பழைய ஏற்பாட்டில் மோசேயுடையபிரசங்கங்களிலும் (உபா. 31-33), புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்திலும் (மத்தேயு 5-7) வியாக்கியானப் பிரசங்கத்தின் அடையாளங்களைப் பார்க்கலாம். அப்போஸ்தலர்களுக்குப்பின் ஆதிக்கிறிஸ்தவம் வெகு சீக்கிரத்திலேயே கீழ்நிலையை அடையத்தொடங்கியது. இக்காலத்தில் வியாக்கியானப்பிரசங்கம் தொடராததே சபை வளர்ச்சி குன்றத் தொடங்கியதற்குக் காரணம். நல்ல பிரசங்கத்தைக் கொண்டமையாத சபை பலவீனமான சபையாகவே இருக்கும். இக்காலப்பகுதிகளில் வெகு சில நல்ல பிரசங்கிகளையே சபை காணக்கூடியதாக இருந்தது. இவர்களில் ஆகஸ்டீன், கிரிஸ்சொஸ்டொம், அம்பிரொஸ் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். ஆனால் இவர்கள் வேதப்பகுதிகளை அவை காணப்படும் பகுதிகளுக்கேற்ப சரியாக விளக்கினாலும், அவற்றைப் போதிக்கும்போது தாம் நினைத்த விதத்தில் பொருள் கொடுத்தனர். உதாரணத்திற்கு, நல்ல சமாரியன் உவமையில் விடுதிக்காரனுக்கு சமாரியன் இரண்டு காசுகள் கொடுத்ததைப் பார்க்கிறோம். அதை விளக்கும் போது அந்த இரண்டு காசுகளும் திருமுழுக்கையும், அப்பம் பிட்குதலையும் குறிப்பதாகக் பொருள் கொண்டனர். கிரிஸ்சொஸ்டொம், எதையும் உருவகப்

படுத்தி விளக்கும் இம்முறையை எதிர்த்தார். இத்தகைய முறையைக் கையாண்டவர்கள் வேதத்தில் காணப்படும் வரலாற்று நிகழச்சிகள், உவமைகள் ஆகியவற்றிற்கு தாம் நினைத்தவிதத்தில் பொருள் கொடுத்தனர். சில வேளைகளில் அவர்களது விளக்கத்தில் எந்தத்தவறும் இல்லாதிருந்தபோதும் அது அவர்கள் பிரசங்கிக்க எடுத்துக் கொண்ட வேதப்பகுதியோடு சம்பந்தமுடையதாக இருக்கவில்லை. இத்தகைய உருவகப்படுத்தும் முறை (Allegorical) வேதத்திற்கு முரணானது.

இக்காலத்தை அடுத்து சீர்திருத்தவாத காலம் தோன்றும் முன்னர் சில சிறந்த பிரசங்கிகளை உலகம் கண்டது. இவர்கள் வியாக்கியானப்பிரசங்கத்திற்கு மறுபடியும் உயிர் கொடுத்தனர். இவர்களில் ஜோன் விக்கிளிப், ஜோன் ஹஸ், செவனரோலா ஆகியோர் சிறப்பானவர்கள்.

### ஆதிசபையிலிருந்து பதினாறாம் நூற்றாண்டு சீர்திருத்தகாலம்வரை

சீர்திருத்தவாத காலமே மறுபடியும் பிரசங்கத்திற்கு உயிரளித்து ஆத்துமாக்களுக்கு உணவளித்தது. இக்காலத்தில் வேதத்தின் அதிகாரமும் போதுமான தன்மையும் மறுபடியும் அங்கீகரிக்கப்பட்டு ரோமன் கத்தோலிக்க சபையின் ஆதிக்கம் தகர்க்கப்பட்டதால் பிரசங்கத்திற்கு மிக உயர்ந்த இடமளிக்கப்பட்டது. மார்டின் லூதர் பண்ணிரண்டு வருட காலம் வேதத்தின் பல பாகங்களில் வியாக்கியானப் பிரசங்கமளித்துள்ளார். அவர் முழுநேர இறையியல் கல்லூரிப் பேராசிரியராக கடமைபுரிந்தபோதும் திறமைவாய்ந்த பிரசங்கியாக இருந்தார்.

சீர்திருத்தவாத காலத்தில் மிகத்திறமைவாய்ந்த வியாக்கியானப்பிரசங்கியாக இருந்தவர் ஜோன் கல்வின். சீர்திருத்தவாதியாகவும், போதகராகவும், எழுத்தாளராகவும் இருந்த கல்வினின் அனைத்து ஊழியங்களுக்கும் ஆன்மீக வல்லமையளித்தது வேதவியாக்கியானப் பிரசங்கமே. ஜெனீவாவில் ஆயிரக்கணக்கான பிரசங்கங்களை கல்வின் அளித்துள்ளார். வேதத்திற்கு மதிப்புக் கொடுத்து அதை மட்டுமே விசுவாசத்துடன் பிரசங்கித்து வந்தார் கல்வின். இன்று நாம் வாசிக்கும் படியாக வெளிவந்துள்ள கல்வினின் அநேக நூல்களே இதற்குச் சாட்சியாக உள்ளன.

### பதினேழாம் நூற்றாண்டு பரிசுத்தவான்கள் காலத்தில்

சீர்திருத்தவாத காலத்தை அடுத்த பதினேழாம் நூற்றாண்டில் பரிசுத்தவான்கள் சபைச் சீர்திருத்தத்தைத் தொடர்ந்தபோது வேதபூர்வமான வியாக்கியானப் பிரசங்கத்திற்கு முக்கியமளித்து அதன் மூலமாக எல்லாச் சீர்திருத்தத்தையும் நாடினர். இவர்களுடைய காலப்பகுதியில் கர்த்தர் அநேக பிரசங்கிகளை எழுப்பினார். தோமஸ் மேன்டனின் பிரசங்கங்கள் 22 நூல்களாக வெளிவந்துள்ளன. இவர் குறுகியதும், நீண்டதுமான தொடரான பிரசங்கங்களைச் செய்துள்ளார். தொமஸ் குட்வின், சிப்ஸ், பிளேவல், தொமஸ் புரூக்ஸ், ஜோன் ஓவன் ஆகியோருடைய பிரசங்கங்கள் இன்றைய பிரசங்கிகளுக்கு ஊழியத்தில் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரக்கூடியவை. துர்ரதிஸ்டவசமாக இந்நூல்கள் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. பதினேழாம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் தலைத்தோங்கி பெரும் எழுப்புதல்களைச் சந்தித்ததற்கு சபைகளில் பிரசங்கத்திற்கு அதி உயர்ந்த இடம் கொடுக்கப்பட்டதே முக்கிய காரணம் என்று கூறினால் மிகையாகாது.

சில பரிசுத்தவான்கள் சில வசனங்களை மட்டும் பயன்படுத்தி கிறிஸ்தவ வாழ்க்கையின் அனுபவங்கள் முழுவதையும் படம் பிடித்துக் காட்டுவதில் வல்லவர்களாயிருந்தனர். உதாரணமாக வில்லியம் கர்னல் எபேசியர் 6:10-18 வசனங்களை மட்டும் பயன்படுத்தி செய்த பிரசங்கங்கள் 1176 பக்கங்கள் கொண்ட நூலாக வெளியிடப்பட்டுள்ளது. கிறிஸ்தவ ஆன்மீக வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்களையும், அவற்றை எதிர்நோக்குவதற்கான வழிமுறைகளையும் அற்புதமாக வடித்துத்தந்துள்ளார் கர்னல். கிறிஸ்தவ வாழ்க்கையில் சபை மக்களுக்கு உதவப் போதகர்களுக்குப் பயன்படக்கூடிய மிக அருமையான நூலிது. இந்நூலில் பரிசுத்தவான்களின் வியாக்கியானப் பிரசங்க முறையைப் பார்க்கலாம்.

### பதினேழாம் நூற்றாண்டிற்குப்பின் இன்றுவரை

இக்காலப்பகுதியில் மிகப் பிரபலமான பிரசங்கிகள் கூட வேதப்புத்தகங்கங்களைத் தொடர்ச்சியாக முறையாகப் போதிக்கும் வியாக்கியானப் பிரசங்கத்திற்கு

**பிரசங்கம்**

**பதினேழாம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் தலைத்தோங்கி பெரும் எழுப்புதல் களைச் சந்தித்ததற்கு சபைகளில் பிரசங்கத்திற்கு அதி உயர்ந்த இடம் கொடுக்கப் பட்டதே முக்கிய காரணம் என்று கூறினால் மிகையாகாது.**

## பிரசங்கம்

முக்கியத்துவம் கொடுக்கவில்லை. நமது நூற்றாண்டில் வியாக்கியானப் பிரசங்கத்திற்கு உயிர் கொடுத்தவர் டாக்டர் மார்டின் லொயிட் ஜோன்ஸ். தனது முப்பது வருட கால போதக ஊழியத்தில் வியாக்கியானப் பிரசங்கத்தின் மூலம் மறுபடியும் பிரசங்க ஊழியத்தை மட்டுமல்லாது சீர்திருத்தத்தையும் ஆரம்பித்து வைத்தார் லொயிட் ஜோன்ஸ். இவரது ஊக்குவிப்பாலேயே பெனர் ஆப் டுருத் நிறுவனம் (The Banner of Truth) ஆரம்பிக்கப்பட்டு சீர்திருத்தவாதிகள், பரிசுத்தவான்கள் ஆகியோரின் நூல்கள் மறுபடியும் வெளிவரத் தொடங்கின. மார்டின் லொயிட் ஜோன்ஸ் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பதின்மூன்று வருட காலம் வெள்ளிக்கிழமைகளில் வேதபாடம் எடுத்துள்ளார். இதற்கு இவர் வியாக்கியான பிரசங்க முறையையே கையாண்டார். இவை இன்று ரோமர் பத்தாம் அதிகாரம் வரை நூல்களாக வெளிவந்துள்ளன.

*1960* களில் சீர்திருத்தவாதப் பரவலினால் அநேக போதகர்கள் வியாக்கியானப் பிரசங்கமுறையைக் கையாளத்தொடங்கினர். இதற்கு பெனர் ஓப் டுருத் நிறுவனத்தின் மூலம் வெளிவரத்தொடங்கிய அநேக பரிசுத்தவான்களின் நூல்களும், டாக்டர் லொயிட் ஜோன்ஸின் பிரசங்க ஊழியத்தின் செல்வாக்கும் காரணமாயிருந்தன. இதே காலப்பகுதியில் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் வருடாந்தம் நடைபெற்ற சீர்திருத்தவாத போதகர்கள் மகாநாடுகளாலும், அதில் பங்கு பெற்ற பல நாடுகளைச் சேர்ந்த போதகர்களாலும் சீர்திருத்தக்கருத்துக்கள் எங்கும் பரவி வேதபூர்வமான பிரசங்கம் செய்வதில் பலர் மத்தியிலும் ஆர்வம் வளரத் தொடங்கியது. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இதன் தாக்கம் பெருமளவில் உணரப்படாவிட்டாலும் தமிழ் நாடு, ஸ்ரீலங்கா போன்ற நாடுகளில் சீர்திருத்தவாதத்தில் ஆர்வம் கொண்ட ஒரு சில சபைகள் தோன்றி வேதபூர்வமான வியாக்கியானப் பிரசங்கத்தில் கவனம் செலுத்தத் தொடங்கின.

**வியாக்கியானப் பிரசங்கம் செய்வதில் இன்று போதகர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். ஆத்துமாக்கள் வேத அறிவில் வளர்ந்து கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டுமானால் இதைத்தவிர வேறு வழியில்லை.**

### வியாக்கியானப் பிரசங்கத்திற்கு அத்தியாவசியமான சாதனங்கள்

வியாக்கியானப் பிரசங்கம் செய்வதில் இன்று போதகர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். ஆத்துமாக்கள் வேத அறிவில் வளர்ந்து கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டுமானால் இதைத்தவிர வேறு வழியில்லை. சபை மேடைகளில் கோமாளிக்கூத்து நடத்திக் கொண்டிருக்கும் பலர் மத்தியில் இது இலகுவான செயலாக இருக்காமல் போனாலும் இதன் மூலம் மட்டுமே கர்த்தரின் சபை ஆவிக்குரிய உணவைப்பெற்று வளர முடியும்.

வியாக்கியானப்பிரசங்கம் செய்வதற்கு என்ன தேவை?

1. முதலாவதாக, கடுமையாக உழைக்கக்கூடிய போதகர்கள் தேவை. சோம்பேரித்தனமுடையவர்கள் இவ்வூழியத்தில் ஈடுபட முடியாது. ஏனெனில் வேதத்தில் அதிக நேரத்தை செலவிட்டு ஆராயவும், படிக்கவும் வேண்டும். ஆகவே, தேவையற்ற காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து வேதத்தைப்படிப்பதிலும், ஜெபிப்பதிலும், பிரசங்கம் தயாரிப்பதிலும் போதகர்கள் ஈடுபட வேண்டும் *(அப்போஸ். 6:4).*

2. போதகர்கள் வேதத்தைப் படிக்கத் தேவையான சாதனங்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள முயல வேண்டும். சொல்லகராதி, வேதநூல்களை விளக்கும் நல்ல விரிவுரை நூல்கள், முடிந்தால் மூல மொழிகளில் அறிவு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள முயல வேண்டும். அத்தோடு பழைய, புதிய ஏற்பாட்டு அறிமுக நூல்கள், அதாவது, அவற்றின் வரலாற்றை எடுத்துக் கூறும் நூல்களை வாசிப்பதும் அவசியம். இவை வேத நூல்களின் வரலாற்று பின்னணியை எடுத்து விளக்கும். இவற்றோடு வேதத்தை விளங்கிக் கொள்வதில் நாம் பயன்படுத்த வேண்டிய விதிமுறைகளிலும் நல்ல அறிவு தேவை. அவ்விதிமுறைகள் வேதத்தை நாம் தவறான விதத்தில் விளங்கிக்கொள்வதிலும், வியாக்கியானம் செய்வதிலும் இருந்து நம்மைக் காக்கும். இச்சாதனங்களை முறையாகப் பயன்படுத்தி வேதத்தை விளங்கிக் கொள்வதில் நாம் நல்ல தேர்ச்சி அடைவது முக்கியம். ஏனோதானோவென்று வேதப்பகுதிகளுக்கு விளக்கம் கொடுக்க முயல்வதை இது தடை செய்யும். கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் தவறானவிதத்தில் விளக்கம் கொடுக்க முயல்வது ஆபத்தான காரியம்.

3. நல்ல போதகர்களின் பிரசங்கங்களைப் போதகர்கள் வாசிக்க வேண்டும். ஸ்பர்ஜன், மார்டின் லொயிட் ஜோன்ஸ் போன்றோரின் பிரசங்க நூல்களைப் பெற்று வாசிக்க வேண்டும். இன்று நூல்கள் மட்டுமல்லாது, ஒலி நாடாக்களிலும்

பிரசங்கம்

இவ்வாறாகப் பிரசங்கங்கள் வெளிவருகின்றன. முக்கியமாக அமெரிக்காவில் திரித்துவ பாப்திஸ்து சபைப் போதகரான அல்பர்ட் என். மார்டினுடைய பிரசங்கங்கள் தொடர்ந்தும் விநியோகிக்கப்படுகின்றன. பாஸ்டர் மார்டின் கர்த்தரால் தொடர்ந்து பயன்படுத்தப்படும் ஒரு சிறந்த சீர்திருத்த போதகரும், பிரசங்கியும் ஆவார். இவரது பிரசங்கங்களைக் கேட்பது இளம் பிரசங்கிகளின் வளர்ச்சிக்கு உதவும்.

### வியாக்கியானப் பிரசங்கத்தை எங்கு? எப்படி ஆரம்பிப்பது?

இளம் போதகர்கள் ஆரம்பத்தில் உபாகமம், யோபு போன்ற நூல்களில் பிரசங்கம் செய்ய ஆரம்பிக்காமல் யோனா, ரூத் பொன்ற சிறு நூல்களைத் தொடர்ச்சியாக வாரா வாரம் பிரசங்கிக்க முயல வேண்டும். யாக்கோபு, முதலாம் யோவான் போன்றவற்றில் ஆரம்பிப்பதும் நல்லது. இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கம் இன்னுமொரு உதாரணம். இதைத் தொடர்ந்து வாராவாரம் பிரசங்கிப்பது நல்ல பலன் தரும். முடிந்தால் லொயிட் ஜோன்ஸ் இதில் பிரசங்கித்த இரண்டுபாக நூல்களையும் வாங்கிப் படித்துப்பயன் பெறலாம். இவற்றில் பிரசங்கம் செய்து தேர்ச்சி பெற்ற பின்னர் ஏனைய நூல்களில் முக்கியமான பகுதிகளில் பிரசங்கம் செய்ய முயற்சிக்கலாம்.

வியாக்கியானப்பிரசங்கம் செய்யும்போது கேட்போர் ஆர்வத்துடன் கேட்கும் விதத்தில் ஒவ்வொரு பிரசங்கமும் அமையும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல் லாது, கேட்போர் எங்கு ஆரம்பித்தொம் என்று மறந்துவிடாமல் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். எனவே, வியாக்கியானப் பிரசங்கங்களை நாம் மிகவும் நீண்ட தாக பலவருடங்களுக்கு இழுத்தடிக்காமல் இருப்பது நல்லது. இவ்வாறு யோபுவை நாற் பது வருடங்களுக்குப் பிரசங்கம் செய்த ஒரு போதகர் தனது ஆத்துமாக்களை சபையி லிருந்து இழக்க நேரிட்டது. இந்நிலைமை நமக்கு வரக்கூடாது.

## 6 அறமான விதி முறைகள்

1. தனிப்பட்ட ஜெபத்தை என்றுமே தவறவிடக்கூடாது; ஜெபிக்கும்போது கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்பதையும் நமது ஜெபத்தைக் கேட்கிறார் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. (எபிரேயர் 11:6).

2. எப்போதுமே தனிப்பட்ட வேத வாசிப்பை தவறவிட்டுவிடக்கூடாது; அவ்வாறு வேதத்தை வாசிக்கும்போது கர்த்தர் நம்மோடு பேசுகிறார் என்பதையும், அவர் பேச்சை நாம் நம்பி அதன்படி நடக்க வேண்டும் என்பதையும் நாம் மறக்கக்கூடாது. இவ்விரு செயல்களையும் தவறவிட்டுவிடுவதாலேயே எல்லா பின்தங்குதல்களும் நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்பட்டுவிடுகின்றன. (யோவான் 5:39).

3. ஒவ்வொரு நாளும் இயேசுவுக்காக எதையும் செய்யாமல் விட்டுவிடக்கூடாது. ஒவ்வொரு இரவும் இயேசு உங்களுக்காக என்ன செய்திருக்கிறார் என்பதை நினைத்துப் பாருங்கள். அதே நேரம் நீங்கள் அவருக்காக என்ன செய்திருக்கிறீர்கள் எனறும் உங்களையே கேட்டுப்பாருங்கள். மத்தேயு 5:13-16).

4. ஒரு காரியம் சரியானதா? தவறானதா? என்ற சதேகம் ஏற்பட்டால் உங்கள் அறைக்குப் போய் தனிமையில் முழங்காலிட்டு கர்த்தரிடம் ஜெபத்தில் கேளுங்கள். (கொலோசேயர் 3:17) உங்களால் இதைச் செய்ய முடியாவிட்டால் அக்காரியம் தவறானது. (ரோமர் 14:23).

5. ஏனைய கிறிஸ்தவர்களை உதாரணமாகக்கொண்டு கிறிஸ்தவத்தை நாம் எடை போடக்கூடாது. அவர்கள் அப்படிச் செய்கிறார்கள் அதனால் நானும் செய்வேன் என்று வாதிடக்கூடாது. (2 கொரி. 10:12). என் நிலைமையில் கிறிஸ்து என்ன செய்வார் என்று கேட்டு, அவ்வழியில் நடப்பதற்கு பெரு முயற்சி எடுக்க வேண்டும். (யோவான் 10:27).

6. உங்களுடைய மனதில்படுவது கர்த்தருடைய வார்த்தைக்கு முரணானதாக இருந்தால் அதை நம்பாதீர்கள். கர்த்தருடைய வார்த்தை உண்மையாக இருந்தால் என் மனதில்படுவது சரியானதாக இருக்க முடியுமா? என்று கேளுங்கள். அவை இரண்டுமே உண்மையாக இல்லாதிருப்பதுபோல் தெரிந்தால் உங்கள் இருதயம் பொய்யானது என்று அறிந்து கர்த்தரை நம்புங்கள். (ரோமர் 3:4; 1 யோவான் 5:10, 11) *– பிரவுன்லோ நோர்த் –*

# கேள்வி? பதில் !



**கேள்வி-பதில்**

**கர்த்தரின் அநாதித் தீர்மானத்தின் மூலம் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் அவரை அறிந்து கொள்ளு முகமாக எந்தவித பாரபட்சமு மின்றி அனைவருக் கும் நற்செய்தி பிரசங்கிக்கப்பட வேண்டும்.**

***1. கிறிஸ்து தனது அனாதித்தீர்மானத்தின்படி முன்குறிக்கப்பட்ட மக்களுக்காக மட்டுமே மரித்தார் என்று சீர்திருத்தக் கோட்பாடு போதிக்கின்றது. முன்பெல் லாம் கர்த்தரை அறியாத ஒரு மனிதன் மரிக்கும்போது, நான் இவரை கர்த்தருக்காக ஆதாயப்படுத்தவில்லையே என்ற வருத்தம் இருந்தது. இப்போது சீர்த்திருத்தக் கோட்பாட்டை அறிந்து கொண்டபின் இந்த மனிதர் ஆண்டவரால் முன் குறிக்கப்படாததால்தான் அவரை அறியாமல் மரித்துவிட்டான். ஆகவே, நான் அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். இது சரியா?***

**பதில்:** *ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது நமக்குத் தெரியும். அதே போல் இரயில் ஓடுவதற்கு இரு தண்டவாளங்கள் அவசியம். கர்த்த ருடைய வேதமும் இதேவகையில் இரு முக்கியமான சத்தியங்களைப் போதிக் கின்றது. நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது எவ்வளவு அவசியமோ அதே போல் இவ்விரு சத்தியங்களையும் ஒன்றுக்கொன்று முரண்படாதவகையில் புரிந்து கொள்வது மிக அவசியம். கர்த்தர் தனது அநாதித் தீர்மானத்தின் மூலம் மனித குலத்தில் ஒரு பகுதியினரைத் தனது குழந்தைகளாகும்படித் தெரிந்து கொண்டுள்ளார் என்று வேதம் போதிக்கின்றது. அவ்வாறு அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மட்டுமே அவரை அறிந்து கொள்வார்கள் என்பதும் வேதம் போதிக்கும் உண்மை. ஆனால், வேதம் நாணயத்தில் இன்னுமொரு பக்கம் இருப்பது போல் வேறொரு உண்மையையும் போதிக்கின்றது. இவ்வுண்மையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, மனித குலம் முழுவதும் அறிந்து கொள்ளும்படியாக கிறிஸ்துவின் நற்செய்தியை நாம் பிரசங்கிக்க வேண்டும் என்றும் வேதம் போதிக்கின்றது (மத்தேயு 28:18-20). கேள்வியின் மூலமே விசுவாசம் வருவதால் அனைவரும் கேட்கும்படியாக நற்செய்தி பிரசங்கிக்கப்பட வேண்டும் (ரோமர்10:27). அதுமட்டுமல்லாது, நற்செய்தியைக் கெட்டு மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டியது அனைவரதும் கடமை என்றும் வேதம் போதிக்கின்றது. இவ்விரு சத்தியங்களும் நமது இரு கண்களைப் போல முக்கியமானவை.*

*ஆகவே, கர்த்தரின் அநாதித்தீர்மானத்தின் மூலம் தெரிந்து கொள்ளப்பட்டவர் கள் அவரை அறிந்து கொள்ளுமுகமாக எந்தவித பாரபட்சமுமின்றி அனைவருக் கும் நற்செய்தி பிரசங்கிக்கப்பட வேண்டும். எல்லா மனிதர்களும் அதைக்கேட்டு மனந்திருந்த வேண்டிய கடமைப்பாட்டினைக் கொண்டுள்ளதால், மனந்திருந் தாதவர்கள் நியாயமாகவே கர்த்தரின் தண்டனைக்குள்ளாகிறார்கள். மனந்திருந் தாதவர்கள் தங்களது சுய பாவத்தின் காரணமாக இருதயம் கடினப்பட்டு நற் செய்தியை நிராகரித்து விடுகிறார்கள். ஆகவே, கர்த்தரை யாரும் குறைகூற முடியாது. ஆனால், நற்செய்தியை அனைவருக்கும் பிரசங்கிக்கும் காரியத்தை நாம் தவறவிட்டுவிடக்கூடாது. நற்செய்தியை நாம் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியத்தை வேதம் வற்புறுத்திக் கூறுகிறது. ஆகவே, யாராவது கர்த்தரை அறியாமல் இறந்துபோனால் அதற்காக நாம் வருத்தப்பட வேண்டியது நியா யமே. ஏனெனில், கர்த்தர் தனது குமாரனாகிய கிறிஸ்துவையும், இரட்சிப்பையும் எந்தவித பாரபட்டமுமின்றி வழங்கியபோது அந்த ஆத்துமா தனது சுய பாவத்தி னால் அவ்வாசீர்வாதங்களை நிராகரித்து நரகத்தை அடைவதால் அது நமக்கு நிச்சயம் வருத்தத்தைத் தருகின்றது.*

*ஒரு ஆத்துமா கர்த்தரை அறியாமல் இறக்கும்போது, அந்த ஆத்துமா கர்த்தரால் தெரிந்து கொள்ளப்படவில்லை, அதனால்தான் அவரை அறியாமல் இறந்து*

விட்டது என்று நம்மை சமாதானப்படுத்திக் கொள்ளும்படி வேதம் எங்குமே போதிக்கவில்லை. இவ்வாறு நினைப்பவர்களை ஹைப்பர் கல்வினீயவாதிகள் என்று அழைப்பர். இவர்களுக்கும் சீர்திருத்தக் கோட்பாட்டாளருக்கும் எந்தத் தொடர்புமில்லை. அதற்கு மாறாக நம்மால் முடிந்தவரை நற்செய்தியை எல்லா மனிதர்களும் கேட்கும்படிச் செய்ய வேண்டும் என்றே வேதம் எதிர்பார்க்கிறது. அத்தோடு நமக்கு மிகவும் அறிமுகமான ஒருவருக்கு நாம் நற்செய்தியை எடுத்துச் சொல்லாமலிருந்து அந்த மனிதர் கர்த்தரை அறியாமல் இறந்திருந்தால் அதற்காக வும் நாம் வருத்தப்படத்தான் வேண்டும். ஏனெனில் நாம் நமது கடமையிலிருந்து தவறியிருக்கிறோம். ஆகவேதான் நற்செய்தியை எடுத்துச் சொல்லும் காரியத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்தல் அவசியம்.

**2. தேவனே, என்னோடு பேசும்; உம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தும் என்று ஜெபித்துவிட்டு வேதத்தைத் திறந்து பார்ப்பது சரியா? தேவனுடைய அழைப்பை எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்வது?**

**பதில்:** தேவன் வேதத்தின் மூலம் மட்டுமே இன்று பேசுகிறார் என்பது வேதம் போதிக்கும் உண்மை. ஆகவே தேவனுடைய சித்தம் வேதத்திலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கெரிஸ்மெட்டிக் கூட்டத்தார் இன்று கர்த்தர் வேதத்தில் வெளிப்படுத்தியுள்ள வழிகளைக் கண்டறியாது அவர் தங்களுடன் தனிப்பட்ட முறையில் பேச வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கின்ற னர். தேவன் வேதத்தில் வெளிப்படுத்தியுள்ள வழிகளை நாம் சரியாகப் புரிந்து கொள்ள ஜெபிக்க வேண்டியது அவசியம். ஆவியானவர் நமக்கு சரியான அறிவைத்தர நாம் ஜெபிக்க வேண்டும். ஆனால் வெறும் ஜெபத்தை மட்டும் செய்துவிட்டு கர்த்தரின் வேதத்தை முறையாகப் படித்து அவர் காட்டும் வழிகளை அறிய மறுப்பது அறிவீனம். ஆகவே வேதம் மட்டுமே கர்த்தரது வழிகளையும், சித்தத்தையும் விளக்கிக் காட்டும் கர்த்தரின் வெளிப்பாடு. நமது வழிகள் அனைத்தையும் வேதத்தை ஆராய்ந்து பார்த்தே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வேதத்திற்கு முரணாக நமது வழிகள் அமைந்திருந்தால் அவை கர்த்தரின் சித்தமல்ல என்ற முடிவுக்கு உடனடியாகவர நாம் தயங்கக் கூடாது. இதுவே மெய்கிறிஸ்தவம் காட்டும் வழியாகும்.

**3. ஒரு பாவி மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது அதற்கு முன் அவன் செய்த எல்லா பாவங்களையும் அறிக்கையிட வேண்டியது அவசியமா?**

**பதில்:** வேதம் மனிதர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண் டும் என்று போதிக்கின்றது. அதாவது, தான் கர்த்தருக்கு முன் பாவி என்று உணர்ந்து அதற்காக வருந்த வேண்டும். மூலபாவம் தன்னை ஆள்வதையும், அதனாலேயே தான் பாவங்களைச் செய்து பாவகரமான வாழ்க்கை வாழ்வதை யும் உணர வேண்டும். இவற்றிற்காக ஒட்டு மொத்தமாக வருந்தி அவற்றிலிருந்து விடுபடக் கர்த்தரை நாடி ஓடி அவரளிக்கும் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு தனது பாவங்களுக்காக ஒருவன் கர்த்தரிடம் மனம்வருந்தும் போது அவன் உண்மையுள்ளவனாக இருந்தால் எல்லாப்பாவங்களுக்காகவுமே மனம் வருந்துவான். இதற்காக ஒரு பட்டியல்போட்டு ஒவ்வொன்றையும் கர்த்த ருக்கு முன் வைக்க வேண்டும் என்று வேதம் போதிக்கவில்லை. இது ரோமன் கத்தோலிக்க மதம் போதிக்கும் போதனை. ஆனால், மனந்திரும்பும் ஒரு மனிதனு டைய வாழ்க்கையில் ஒளிவு மறைவுக்கு இடமிருக்காது என்று வேதம் போதிக் கின்றது. ஒருவன் தன் பாவங்களுக்காக மனந்திரும்பும்போது ஒட்டு மொத்தமாக எல்லாப் பாவங்களுக்காகவுமே மனந்திரும்ப வேண்டும்.

**கேள்வி-பதில்**

***வேதம் மட்டுமே கர்த்தரது வழிகளையும், சித்தத்தையும் விளக்கிக் காட்டும் கர்த்தரின் வெளிப்பாடு.***

அடுத்த இதழிலிருந்து தொடராக மலரும்

## கிறிஸ்தவ இறையியல்

*கிறிஸ்தவ இறையியல் என்ற தலைப்பில் போதகர்களுக்கும், ஊழியக்காரர்களுக்கும் மற்றும் வாசகர்களுக்கும் பயன்படும்படியான இறையியல் பாடத்தை அடுத்த இதழில் இருந்து நீங்கள் எதிர்பார்க்கலாம். வேதபூர்வமான இறையியல் அறிவு வேதபூர்வமான பிரசங்கத்திற்கும், போதனைக்கும் அவசியம். இப்பாடங்களைத் தயாரிக்கும் ஆசிரியர், போதகர்களுக்காக ஜெபியுங்கள்.*

**ஜே. ஐ. பெக்கர் ஜோன் ஓவனின் நூலுக்கு வழங்கிய முன்னுரை**

# கிருபையின் கோட்பாடுகள்



- ஓர் அறிமுகம் -

## கிருபை

ஓவன் அடிகளாரின் வாதம் மிக எளிமையானது. கிறிஸ்துவின் பாவப் பரிகாரத்தினுடைய அளவைப்பற்றிய கேள்வியே ஓவன் அடிகளார் இவ்வாய்வுக் கட்டுரையை எழுதுவதற்குக் காரணமாயிருந்தது. அதாவது, கிறிஸ்துவின் பிராயச்சித்தப்பலி இறுதியில் அழியப்போகிற மக்களுக்காகவும் கொடுக்கப்பட்டதாக இருக்குமானால், அது யாருக்காக ஏற்படுத்தப்பட்டதோ அவர்களுக்கு மெய்யான இரட்சிப்பை பெற்றுத்தரக்கூடிய ஒரு நடவடிக்கையாக இருக்க முடியாது என்ற உண்மையைக்குறித்த கேள்வியையே ஓவன் ஆராய்கிறார். ஓவன் அடிகளாரைப் பொறுத்தவரையில், வேதபோதனையின்படி இந்தப்பிராயச்சித்தமானது எவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டதோ அவர்களுக்கு மட்டுமே நிச்சயமான இரட்சிப்பைப் பெற்றுத்தரக்கூடியது. அவரது ஆய்வுக்கட்டுரையின் முதலிரு பாகங்களும், வேதத்தின்படி இரட்சகரின் மரணமானது, எதை நிறைவேற்றவேண்டும் என்று கருதப்பட்டதோ அதன்படியே கர்த்தருடைய மக்களை மீட்கிறது என்ற உண்மையைப்பற்றிய உள்ளத்தில் பதியும் ஆற்றல் வாய்ந்த சான்றுகளுடனான விளக்கத்தைத் தருகின்றன. அதன் மூன்றாவது பாகம், உலகளாவிய இரட்சிப்பு எனும் கொள்கைக்கு வாத ஆதாரமாகக் கொடுக்கப்படும் கருத்துக்களுக்கு எதிராக வரிசையாக அமையும் பதினாறு வாதங்களைக் கொண்டுள்ளது. இவையனைத்தும், இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் செயலானது இறுதியில் அழிந்து போகிறவர்களை அல்ல, அவரால் இரட்சிக்கப்படும்படித் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களையே இரட்சிக்க வல்லமையுள்ளது என்றே வேதம் போதிக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றன. அதேவேளை, அந்தப்பிராயச் சித்தம் உலகம் முழுவதற்குமாக கொடுக்கப்பட்டதாக இருக்குமானால், ஒன்று எல்லோருமே இரட்சிக்கப்படுவார்கள் (இதனை வேதம் நிராகரிக்கின்றது, அதுமட்டுமல்லாமல் பொதுவான பரிகாரத்தை ஆதரித்து வாதிடுபவர்களும் இதனை உறுதி செய்வதில்லை), அல்லது பிதாவாகிய தேவனும், குமாரனாகிய ஆண்டவரும் தாங்கள் செய்யத்தொடங்கிய காரியத்தை நிறைவேற்றத் தவறிவிட்டார்கள் (இவ்வாறு கூறுவது தேவனுடைய ஞானம், வல்லமை, பூரணத்துவம் இவற்றை தேவநிந்தனை செய்வதோடு கிறிஸ்துவினுடைய மரணத்தின் உயர்ந்த நோக்கங்களையும், மதிப்பையும் இகழ்ந்து பேசுவதுமாகும்) என்று கூறுவது போலாகும் என்றும் ஓவன் எடுத்துக் காட்டுகிறார். அவரது வாதங்கள் இந்தக் குளறுபடிகளுக்கு சரியான விளக்கத்தைத் தருகின்றன.

இறுதியாக, தமது ஆய்வுக்கட்டுரையின் நான்காவது பாகத்தில், இரட்சிக்கப்படாதவர்களுக்காகவும் இயேசு கிறிஸ்து மரித்தார் என்பதை நிரூபிக்க சிலர் பயன்படுத்துகின்ற மூன்று வேதப்பகுதிகளை (முழு உலகத்திற்காகவும் மரித்தார், எல்லோருக்காகவும் மரித்தார், மற்றும் யாருக்காக அவர் மரித்தாரோ அவர்களும் அழிந்து போவர் என்ற போலிப் போதனைகளுக்காக பயன்படுத்தப்படும் வேத பகுதிகள்), அவை வேத அடிப்படையில் அவ்வாறு போதிக்கவில்லை என்று நம்பக்கூடியவித்தில் ஆற்றலுடன் ஓவன் அடிகளார் எடுத்து விளக்குகிறார். மேலும் உலகளாவிய இரட்சிப்பு என்னும் கொள்கையை நிலை நிறுத்துவதற்கான இறையியல் ஊகங்கள் எல்லாம் முற்றிலும் தவறான வேத அடிப்படையில் அமையாத வாதங்களே என்றும் எடுத்துக்காட்டுகிறார். கிறிஸ்து அழிந்து போகும் ஒவ்வொரு மனிதருக்காகவும் மரித்தார் என்ற நவீன சுவிஷேசக் கோட்பாட்டை ஓவன் தனது நூலில் சாடுகிறார். இப்போதனை ஆண்டவருடைய அன்பையும், கிருபையையும் மேன்மைப்படுத்தாமல் அவற்றை அவமதிக்கின்றது. ஏனெனில், தேவனுடைய அன்பை வல்மையற்ற வெறும் விருப்பமாகவும், இரட்சிக்கும் கிருபையின் செயற்பாட்டை ஒரு தெய்வீகத் தோல்வியின் ஞாபகச்சின்னமாகவும் சித்தரிக்கின்றது. அத்தோடு கிறிஸ்துவின் மரணத்தின் தகுதியையும், மதிப்பையும் குறைப்பதோடு, கிறிஸ்து வீணாக மரித்தார் என்ற

**கிறிஸ்து அழிந்து போகும் ஒவ்வொரு மனிதருக்காகவும் மரித்தார் என்ற நவீன சுவிஷேசக் கோட்பாட்டை ஓவன் தனது நூலில் சாடுகிறார்.**

எண்ணத்தை ஏற்படுத்துகிறது. மேலும் விசுவாசத்தை வலுப்படுத்தாமல் வேதத்தின் அடிப்படையிலான நிச்சயத்துவத்தை ஒட்டு மொத்தமாக அழிக்கிறது. ஏனென்றால் கிறிஸ்து எனக்காக மரித்தார் என்ற அறிவே எனது நித்திய இரட்சிப்பிற்குப் போதுமான ஆதாரம் என்பதை இப்போதனை மறுக்கின்றது. இக்கொள்கையின்படி, எனது இரட்சிப்பு கிறிஸ்து எனக்காக என்ன செய்தார் என்பதில் தங்கியிராமல், நான் அதை அடைவதற்காக என்ன செய்தேன் என்பதிலேயே தங்கியுள்ளது. ஆகவே, இக்கண்ணோட்டம் கிறிஸ்துவின் அன்பிற்கும், கிறிஸ்துவின் மீட்பிற்கும் வேதம் அளிக்கும் மகிமையை முற்றாக அகற்றி, "ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" என்ற (எபேசியர் 2:9) வேத போதனைக்கு முரணான சுய இரட்சிப்பு ஆகிய கொள்கையை அறிமுகப்படுத்துகின்றது.

சுயமுயற்சி, தேவகிருபை ஆகிய இரு வழிகளின் மூலமும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில், முழு உலக மக்களையும் இரட்சிக்கும் பரிகாரப்பலிக் கொள்கை பரிகாரப்பலியின் மதிப்பைக் குறைக்கின்றது. அது தனது இரட்சிக்கும் வல்லமையையும் இழக்கின்றது; நம்மை நாமே இரட்சித்துக் கொள்ளும் நிலைமைக்குத் தள்ளுகிறது. ஓவன் அடிகள் நிராகரிப்பது போல், எல்லோருக்கும் பொதுவான பரிகாரப்பலி எனும் கொள்கையை, ஒரு வருந்தக்கூடிய தவறாகக் கருதி நாம் நிராகரிக்க வேண்டும். அதேவேளை, இதற்கு மாறாக ஓவன் அடிகள் முன்வைக்கும் கோட்பாடு வேதபூர்வமானதாகவும், தேவனை மகிமைப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இது கிறிஸ்துவை மகிமைப்படுத்தி, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சிலுவையை மட்டும் மகிமைப்படுத்துமாறும், அவர்களுடைய நம்பிக்கையையும், நிச்சயத்தையும் கிறிஸ்துவினுடைய மரணத்தினாலும், பரிந்துரையினாலும் மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் போதிக்கின்றது. வேறுவிதத்தில் கூறப்போனால், இதுவே மெய்யான சுவிஷேசக் கோட்பாடாகும். இதுவே, உண்மையில் தேவனுடைய சுவிஷேசமும் உலகளாவிய விசுவாசமுமாகும்.


திரித்துவக் கடவுளின் திட்டமிட்டு செயற்படுத்தப்படும் மீட்பின் பணியைப்பற்றி ஓவன் அடிகள் தரும் விளக்கத்தொடு ஒப்பிடும் அளவுக்கு வேறு எவரும் இதுவரை எதையும் வெளியிடவில்லை என்றுதான் கூற வேண்டும். இதைவிட வேறெதுவும் அவசியமாயிருக்கவில்லை. அன்ரூ தோமஸ் என்பவர், ஓவன் அடிகளின் நூலின் இறுதிப்பாகத்தை அடையும்போது, இதற்கு மேலும் எழுத வேண்டியளவுக்கு வேறு எதுவும் இல்லை என்ற நிலையைத் தானும் அடைந்துள்ளார் என்ற உணர்வை ஓவன் அடிகள் ஏற்படுத்துகிறார் என்று குறிப்பிட்டுள்ளார். அதை நிரூபிக்கும்வகையிலேயே அவரது ஆய்வு அமைந்துள்ளது. வேதப் பகுதிகளை அவர் நிச்சயமான முறையில் விளக்கியுள்ளார். தனது இறையியலை அபாரமான முறையில் கட்டமைத்துள்ளார். விவாதிக்கப்பட வேண்டிய எந்தவொரு பகுதியையும் அவர் விட்டுவைக்கவில்லை. ஓவன் அடிகள் முதலில் கவனித்து விளக்கம் தராத எந்தவொருவாதமும், அவரது வாதங்களுக்கு சார்பாகவோ அல்லது எதிராகவோ இதுவரையும் கொடுக்கப்படவில்லை. வேதபூர்வமான சிந்தனை மூலம், கடும் உழைப்புடன், சிரத்தையுடன் கொடுக்கப்பட்டுள்ள உறுதியான வேதவிளக்கங்களையே ஓவன் அடிகளின் நூலில் எவரும் காணமுடியும். ஓவன் அடிகள் வேதப்பகுதிகளை ஒன்றுக்குமேல் ஒன்றாக அடுக்கி, கிறிஸ்துவின் வரையறுக்கப்பட்ட பிராயச்சித்தம் (குறிப்பிட்டவர்களுக்கான பரிகாரப்பலி) முழு வேதமும் போதிக்கும் ஒரு போதனை என்று விளக்கியளிக்கும் வாதங்களுக்குப் பதிலளிக்கும் வரையில் எவருமே அதனைக் கல்வினீயவாதிகளின் கற்பனையில் உதித்த ஒரு பெரும் காட்டு விலங்காகக்கருதி நிராகரித்து விட முடியாது. இதுவரையும் எவருமே அதைச் செய்ததுமில்லை. (வளரும்)

**கிருபை**

**திரித்துவக் கடவுளின் திட்டமிட்டு செயற் படுத்தப் படும் மீட்பின் பணியைப் பற்றி ஓவன் அடிகள் தரும் விளக்கத் தொடு ஒப்பிடும் அளவுக்கு வேறு எவரும் இதுவரை எதையும் வெளியிட வில்லை என்றுதான் கூற வேண்டும்.**

**கல்வினும், ஆகஸ்தீனும், பவுலும் பிரசங்கித்த அதே சத்தியத்தையே இன்று நானும் பிரசங்கிக்க வேண்டும். இல்லாவிட்டால் எனது மனச்சாட்சிக்கும் கடவுளுக்கும் நான் தீங்கு செய்தவனாவேன். சத்தியத்தை என்னால் ஒழுங்குபடுத்த முடியாது. சத்தியத்தின் சரியில்லாத பகுதிகளை ஒழுங்கு செய்ய வேண்டும் என்ற செய்தியையே நான் கேள்விப்பட்டதில்லை. ஜோன் நொக்ஸினுடைய சுவிஷேசமே என்னுடைய சுவிஷேசம்.**

– சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் –



# இந்து மதத்தில் கிறிஸ்தவம்?

**விமர்சனம்**

**திரு. தெய்வநாயகம் தமிழகத்தின் முன்னணி அரசியல் சமுதாய இயக்கங்களான திராவிட இயக்கங்களோடு பெருந் தொடர்பு கொண்டவர். அவ்வியக் கங்கள் பெற்றெடுத்த பல வாரிசு களில் இவரும் ஒருவர் என்று கூறினாலும் தகும்.**

கடந்த வருடத்தில் இந்தியாவின் *50* ஆவது வருட ஆண்டு விழா வினைச் சிறப்பிக்குமுகமாக திரு. தெய்வநாயகம் டாக்டர் டீ. தேவ கலாவை சக ஆசிரியராகக் கொண்டு "இந்து சமயத்தில் கிறிஸ்தவம்" என்ற நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார். *266* பக்கங்கள் கொண்ட இந்நூல், திரு. தெய்வநாயகம் ஏற்கனவே "திருக்குறள், சைவசித்தாந்தம், விவிலியம் - ஒப்பாய்வு" என்ற தலைப்பில் கொடுத்துள்ள ஆய்வுக்கட்டுரையின் ஆங்கில வடிவமாகும். இந்நூலில் அவர் எதையும் புதிதாகத் தெரிவிக்கவில்லை. இதற்கு பதிலளித்து திருமறையா? திராவிட சமயமா? என்ற சிறு நூலை நாம் வெளியிட்டதை வாசகர்கள் அறிவர். அதனைப் புதுப்பித்து மறுபடியும் வெளியிட எண்ணியுள்ளதையும் வாசகர்கள் அறிவர். "இந்து சமயத்தில் கிறிஸ்தவம்" எனும் இப்புதிய நூலை விமர்சித்து திருமறைத் தீப ஆசிரியர் ஆங்கிலத்தில் ஒரு நீண்ட கட்டுரையை வெளியிட்டுள்ளார். அதன் சுருக்கத்தை இங்கே வாசகர்களுக்கு தமிழில் தருகிறோம்.

திரு. தெய்வநாயகம் தமிழகத்தின் திராவிட இயக்கங்களோடு தொடர்புடையவர். இவர் தமிழகத்தில் காணப்பட்ட ஆதித் திராவிட சமயம் இந்தியாவின் ஆதிக் கிறிஸ்தவமேயல்லாது அதற்கு இந்து சமயத்தோடு எந்தத்தொடர்பும் இல்லை என்று நிரூபிக்க முயற்சி செய்துள்ளார். இவ்வாதிக் கிறிஸ்தவம் தமிழகத்தில் தழைக்கத் துணை புரிந்தவர் தமிழகத்திற்கு வருகை தந்த அப்போஸ்தலர் தோமஸ் என்பது இவரது வாதம். இவ்வாதிக் கிறிஸ்தவம் ஒரே தேவனை அடிப்படை யாகக் கொண்டு ஐரோப்பிய கிறிஸ்தவத்தை எந்தவிதத்திலும் பிரதிபலிக்காது இந்திய கலாச்சார சூழலுக்கு ஏற்ற தனித்தன்மை யைக் கொண்டிருந்ததாக இந் நூலாசிரியர் வாதிக்கின்றார். அத்தோடு வடதேசத்து பிராமணர்களே இந்து சமயத்தில் தற்போது காணப்படும் பலவிதமான தகனப் பலிகள், புரோகிதர் முறை ஆகியவற்றை தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தி தமிழர்களை ஆண்டு வருகி றார்கள் என்றும் வாதிக்கிறார்.

இந்நூலின் முதலாவது பாகம் திரு. தெய்வநாயகத்தின் மேற்குறிப்பிட்ட ஆய்வை விபரிக்கின்றது. அதன் மூன்றாம், நான்காம் பாகங்கள் பிராமணர்கள் எவ்வாறு தமது சமயத்தை தமிழகத்தில் நுழைத்தார்கள் என்று விபரிப்பதோடு அதை ஒழிக்கத் தமிழர்கள் நடத்த வேண்டிய போராட்ட முறையையும் விபரிக்கின்றது.

### திராவிட இயக்கங்களும், திரு. தெய்வநாயகமும்

இவரது வாதத்திற்கு நாம் பதில் கூறுமுன் இவருடைய பின்னணி என்ன என்று ஓரளவு அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். திரு. தெய்வநாயகம் தமிழகத் தின் முன்னணி அரசியல் சமுதாய இயக்கங்களான திராவிட இயக்கங்களோடு பெருந் தொடர்பு கொண்டவர். அவ்வியக்கங்கள் பெற்றெடுத்த பல வாரிசுகளில் இவரும் ஒருவர் என்று கூறினாலும் தகும். இவ்வியக்கங்களைப் பற்றி ஒரு சிறிது அறிந்து கொள்வது இந்நூலின் தோற்றத்திற்கான காரணத்தைப் புரிந்து கொள்ளத் துணை செய்யும். தமிழகத்து திராவிட இயக்கங்களின் தந்தை ஈ. வே. ரா. பெரி யார். தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சிக்காகப் போராட எழுந்தது பெரியாரின் திராவிட இயக்கம். பெரியாருக்கு பக்கபலமாக இருந்தவர்கள் முன்னாள் முதல் வர் அண்ணாத்துரையும், தற்போதைய தமிழக முதல்வர் கருணாநிதியுமாவர். இவ்வியக்கம் பின்னால் கருத்து வேறுபாட்டால் பிரிவடைந்து அண்ணாத்துரை யின் தலைமையில் திராவிட முன்னேற்ற கழகம் உருவாகியது. ஆரம்ப முதலே இவ்வியக்கங்கள் தமிழர் விடுதலைக்காகப் பாடுபடுவதாக பறைசாற்றிக் கொண் டன. தமிழர்கள் விடுதலை பெற்று தமிழகத்தை ஆளவேண்டுமானால் தமிழ்

நாட்டில் பிராமணர்களின் ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்று இவ்வியக்கங்கள் போராடி வந்தன. பிராமணர்கள் வட இந்தியாவில் இருந்து வந்து தமிழ் நாட்டில் குடியேறியவர்கள்; இவர்கள் தங்கள் மதத்தையும் கலாச்சாரத்தையும் தமிழ் நாட்டில் பரப்பி தமிழர்களை தமக்குக்கீழாகக் கொண்டுவந்து அவர்களை ஆண்டு வருகிறார்கள் என்று இவ்வியக்கங்கள் பிரச்சாரம் செய்தன. தமிழையும் தமிழ்க்கலாச்சாரத்தையும் பாதுகாக்கும் காவலர்களாகத் தம்மைக்காட்டி செந்தமிழில் பேசிக் கேட்போரை மயக்கி இறுதியில் பதவியையும் கைப்பற்றியது திராவிட முன்னேற்றக் கழகம். இவ்வியக்கங்களின் பிரச்சாரத்தால் கவரப்பட்டு ஒரு காலத்தில் தமிழர்களுக்கு நிச்சயம் புதுவாழ்வு கிட்டத்தான் போகிறது என்று நம்பிய தமிழர்கள் பலர். இவ்வியக்கத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றுபவரே இந்நூலாசிரியர்.

## இந்துமதமும், பிராமணர்களும்

பிராமணர்களின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்கு இந்துமதம் தடையாக இருந்ததை திராவிட இயக்கங்கள் உணர்ந்திருந்தன. தமிழர்கள் இந்துக்களாக இருக்கும்வரை பிராமணர்களின் ஆதிக்கத்தை ஒடுக்குவது என்பது நடவாத காரியம் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஏனெனில் அனைத்து இந்துமத மடங்களின் ஆதீனகர்த்தாக்களாக பிராமணர்களே இருந்ததுடன், எல்லாக் கோவில் பூசாரிகளாகவும் அவர்களே இருந்தனர். இவ்வாதிக்கத்தை பிராமணர்களிடம் இருந்து அகற்றாதவரை தமிழருக்கு நிரந்தர விடுதலை கிடைக்காதென்பதும் திராவிட இயக்கங்கள் அறிந்திருந்த உண்மை. ஆகவே, பிராமணரின் ஆதிக்கத்திலிருந்து தமிழரை விடுவிக்க வேண்டுமானால் இந்து மதத்திலிருந்து அவர்களுக்கு விடுதலை வேண்டும். இதனால்தான் பெரியார் முதல் அனைத்து திராவிடத் தலைவர்களும் இந்துக்கடவுளர்களைத் தாக்கிப் பேசியுள்ளனர், எழுதியுள்ளனர். இவர்களுடைய பிரச்சாரமே ஆதித்திராவிட சமயம் பிராமணீயத்தைக் கொண்டிராத ஒரே கடவுள் கோட்பாடு என்பது. இவர்களுடைய வாதப்படி பல கடவுள் வணக்கமும், மடங்களும், ஆதீனங்களும், பலிகளும், பிராமணீயமும் வடவர் தென்னகத்திற்குக் கொண்டுவந்த வழிமுறைகளாகும். ஆதியில் தமிழர் கொண்டிருந்த கடவுள் வணக்கம் இவைகளை அறியாதிருந்தது என்பது இவர்களது பிரச்சாரமாக இருந்தது. இவ்வியக்கத்தின் வழிப்படி இவற்றைப் பத்திரிகை வைத்து எழுதி ஆதரித்து வந்தவர் திரு. தெய்வநாயகம்.

## இந்து மதமும், சாதிப்பாகுபாடும்

இந்து மதம் மட்டுமல்லாமல் திராவிட இயக்கங்களின் இலட்சியங்களுக்குத் தடையாக இருந்த இன்னுமொரு ஆபத்து சாதிப்பாகுபாடாகும். திராவிட இயக்கங்கள் சாதிப்பாகுபாட்டை வெறுத்தன. இதற்குக் காரணம் அதைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தவர்கள் வட தேசத்துப் பிராமணர்கள் என்று அவர்கள் நம்பியதுதான். சாதிப்பாகுபாடு இருக்கும்வரை இந்து மதத்தை ஒழிக்க முடியாது என்பது திராவிட இயக்கங்களுக்கு நன்றாகப் புரிந்திருந்தது. இந்து மதத்தின் அடித்தளமே ஒருவிதத்தில் சாதிப்பாகுபாட்டு முறைதான். இவை இரண்டும் ஒன்றரக் கலந்திருந்தன. ஒன்றிலிருந்து மற்றொன்றைப்பிரிப்பதென்பது இலகுவானதல்ல. இந்நிலைமையே திராவிட இயக்கங்களைப் பிராமணர்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கத் தூண்டின.

## கிறிஸ்தவத்தை இந்து மதத்தோடு ஒப்பிடும் திராவிட இயக்கங்களின் ஆய்வுப்பணி

பதவிக்கு வந்த நாட்தொடக்கம் திராவிட முன்னேற்றக் கழகமும் சரி அதிலிருந்து விலகி பின்பு திரு. எம். ஜி. ஆரால் அமைக்கப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சரி தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளை நடத்தி தமிழர் தோற்றம், வரலாறு பற்றி ஆராய ஆய்வாளருக்குப் பேரூக்கமளித்தனர். இக்காலத்தில் திராவிட இயக்கங்களில் ஊக்குவிப்பால் கிறிஸ்தவத்தையும் இந்துமதத்தையும் ஒருங்கிணைக்கும் பணியில் சிலர் ஈடுபட்டனர். இதற்குக் காரணம் கிறிஸ்தவம் ஒரே தேவன் என்ற கொள்கையையும், சாதிகளற்ற சமுதாயம் என்ற கோட்பாட்டையும் கொண்டிருந்ததுதான். இது ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற திராவிட இயக்கக்கொள்கைக்கு மிகவும் ஒத்துப் போவதாயிருந்தது. அதுமட்டுமல்லாது அப்போஸ்தலர் தோமஸ் தென் இந்தியாவுக்கு வந்திருந்தார் என்ற வாய்வழிவந்த கொள்கையும் இவர்களுக்குக் கைகொடுத்தது. இத்தகைய ஆய்வு

**விமர்சனம்**

***கிறிஸ்தவத்தின் அடிப்படையில் கிறிஸ்துவை மகிமைப் படுத்தும் நோக்கத்தில் அல்லாது இனப் பாதுகாப்பு, இனவளர்ச்சி என்ற ஒரே நோக்கத்தில் திராவிட இயக்கங்களின் இலட்சியத்தை நிறைவேற்றும் அரசியல், சமுதாயப் போராட்டத் தின் ஒரு அங்கமாகவே திரு. தெய்வ நாயகம் இந்நூலை வரைந்துள்ளார்.***

## விமர்சனம்

**கத்தோலிக்க மதத்தின் போதனைகள் அனைத்தும் கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு முரணானவை. கத்தோலிக்கர்கள் வேதத்தோடு வேறும் பல நூல்களை இணைத்துக் கொண்டுள்ளதோடு, சபையே வேதத்தைவிட அதிராகமுள்ளது என்றும் விசுவாசிக்கிறார்கள்.**

களில் ஈடுபட்டவர்களில் அப்பாத்துரை, ஞானசிகாமணி, தெய்வநாயகம் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். அகஸ்தியர் ஞானம் போன்ற நூல்களும், ஆதி சித்தர்கள் அப்போஸ்தலர்களின் சீடர்கள் என்று சுட்டிக்காட்டும் நூல்களும் இக் காலத்தில் வெளிவந்தன. இவ்வாறாக தமிழாராய்ச்சி மகாநாடொன்றில் கொடுக்கப்பட்ட ஒரு ஆய்வேடே திரு. தெய்வநாயகத்தின் திருக்குறள், சைவசித்தாந்தம், விவிலியம் என்ற நூல். இதற்குப்பதிலளித்து 1995 இல் வெளிவந்த சிறுநாலே திருமறையா? திராவிட சமயமா? என்பது. இந்நூலில் திரு. தெய்வநாயகம் தகுந்த வேத அறிவின்றி எவ்வாறு இந்து சமயத்தையும் கிறிஸ்தவத்தையும் இணைக்க முயன்று வேதப் பகுதிகளை சரிவர ஆராயாது திரித்துப் பயன்படுத்தி பல தவறான முடிவுகளுக்கு வந்துள்ளார் என்று எடுத்து காட்டியுள்ளேன். இவரது முடிவுகளுக்கு எந்தவிதமான நிரூபிக்கக்கூடிய வேத ஆதாரங்களோ அல்லது முடிவான வரலாற்று ஆதாரங்களோ இல்லை என்பதையும் இந்நூல் விளக்குகின்றது.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது திரு. தெய்வநாயகத்தின் அரசியல், சமுதாயப் பின்னணியை நம்மால் புரிந்து கொள்ள முடிவதோடு அவரது நூலுக்கான நோக்கங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இவரது இப்புதிய நூலை திராவிட இயக்க, சிறுபான்மை இனவிடுதலை இயக்கத் தலைவர்கள் வெளியிட்டு வைத்திருப்பதும் நமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. திரு. தெய்வநாயகமே சென்னையிலுள்ள திராவிட சமய எழுப்புதல் இயக்கத்தின் தலைவராகவும், பிற்பட்ட வகுப்புகள் மற்றும் சிறுபான்மை மக்கள் பாதுகாப்பு இயக்கத் தலைவராகவும் இருந்து வருகிறார். ஆகவே, கிறிஸ்தவத்தின் அடிப்படையில் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் நோக்கத்தில் அல்லாது இனப் பாதுகாப்பு, இனவளர்ச்சி என்ற ஒரே நோக்கத்தில் திராவிட இயக்கங்களின் இலட்சியத்தை நிறைவேற்றும் அரசியல், சமுதாயப் போராட்டத்தின் ஒரு அங்கமாகவே திரு. தெய்வநாயகம் இந் நூலை வரைந்துள்ளார். இதற்கு இந்நூலின் பிராமண எதிர்ப்புப் போராட்டத்தை வற்புறுத்தும் மூன்றாம், நான்காம் பாகங்களே தெளிவான சாட்சிகளாக இருக்கின்றன. தனது இனவிடுதலைப் போராட்டத்திற்கு பயன்படுமுகமாக கிறிஸ்தவத்தைப் பயன்படுத்திக் கொள்வதே இந்நூலாசிரியரது நோக்கம்.

இந்நூலின் பல அம்சங்களுக்கும் நான் ஏற்கனவே பதில் கூறியுள்ளதால் நான்கு முக்கியமான அம்சங்களை மட்டும் மறுபடியும் வலியுத்திக்கூற விரும்புகிறேன்.

### 1. கத்தோலிக்க மதம் கிறிஸ்தவத்தின் ஒரு கிளையல்ல.

திரு. தெய்வநாயகத்திற்கு கிறிஸ்தவத்தில் சரியான தெளிவில்லை என்பதை அவர் கத்தோலிக்க மதத்தையும் கிறிஸ்தவத்தையும் ஒன்றாகக் கருதுவதிலிருந்து புரிந்து கொள்ள முடிகின்றது. கத்தோலிக்க மதத்தை கிறிஸ்தவ சமயக்கிளையாக இவர் கருதுகின்றார். இதனை இந்நூலின் 51 ஆவது பக்கத்தில் காணலாம். இதனால் தான் இவர் சிலை வணக்கத்தைக் கொண்டமைந்த ரோமன் கத்தொலிக்க மதத்தை ஒத்ததாகக் காணப்படும் சீரிய கிறிஸ்தவத்தை கிறிஸ்தவத்தோடு சம்பந்தப்படுத்தி மனதைக் குழப்பிக் கொள்கிறார்.

கத்தோலிக்க மதம் கிறிஸ்தவம் அல்ல என்பது இன்று வரலாறு தெரியாத அநேகருக்குப் புரிவதில்லை. கத்தோலிக்க மதம் என்றுமே கிறிஸ்தவத்தொடு தொடர்புடையதாயிருக்கவில்லை. கத்தோலிக்க மதத்தின் போதனைகள் அனைத்தும் கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு முரணானவை. கத்தோலிக்கர்கள் வேதத்தோடு வேறும் பல நூல்களை இணைத்துக் கொண்டுள்ளதோடு, சபையே வேதத்தைவிட அதிராகமுள்ளது என்று விசுவாசிக்கிறார்கள். கத்தோலிக்க மதம் இரட்சிப்பு கிரியையினால் பெறப்படுகின்றது என்று போதிக்க கிறிஸ்தவம் இரட்சிப்பு தேவ கிருபையினால் கிடைக்கின்றது என்று போதிக்கின்றது. கத்தோலிக்க மதம் அதன் தலைவரான போப்பையர் தெய்வீக அம்சமுள்ள கடவுளின் பிரதிநிதி என்று போதிக்க, வேதம் அத்தகைய ஆசாரித்துவ முறையையே வன்மையாகக் கண்டிக்கின்றது. கத்தோலிக்கத்திற்கும், கிறிஸ்தவத்திற்குமிடையில் அடிப்படையிலேயே வேறுபாடிருக்க அது புரியாமல் கத்தொலிக்க மதத்தை கிறிஸ்தவத்தோடு சம்பந்தப்படுத்தி திரு. தெய்வநாயகம் தனது இனவிடுலைப் போராட்டத்திற்கு கிறிஸ்தவத்தைப் பயன்படுத்த முயற்சிக்கிறார்.

### 2. எது மெய் கிறிஸ்தவம்?

எது மெய் கிறிஸ்தவம்? என்பதில் நூலாசிரியருக்கு பெரும் மனக்குழப்பம் ஏற்பட்

டுள்ளது. கர்த்தரின் கிருபை மட்டுமே எவருக்கும் கிறிஸ்துவைப்பற்றியும், கிறிஸ்தவத்தைப் பற்றிய அறிவைத்தர முடியும். இயேசு கிறிஸ்து கர்த்தரால் இவ்வுலகிற்கு உலக மனிதர்களின் பாவத்தைப் போக்குவதற்காக கல்வாரியில் தன்னைப் பலி கொடுக்க அனுப்பப்பட்டவர். கிறிஸ்து சாதாரண மனிதரல்ல, அவர் தேவ மனிதர். கிறிஸ்து வின் கல்வாரி மரணம் மட்டுமே பாவிகளின் மீது கடவுளுக்கிருந்த தேவ கோபத்தை நீக்கி அவர்கள் பாவநிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளும் வழியை ஏற்படுத்தியது. உலகின் சகல ஜாதிகளுக்கும், இனங்களுக்கும் மத்தியில் எந்தவித மாற்றமோ, கலப்போ இன்றி இந்த நற்செய்தி பிரசங்கிக்கப்பட வேண்டுமென்பது தேவ கட்டளை. இந்தக் கலப்பற்ற நற்செய்தியைக் கேட்பதாலும் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிப்பதாலும் மட்டுமே எவரும் நித்திய ஜீவனையும், இரட்சிப்பையும் பெற்றுக் கொள்ள முடியும். இந்த நற்செய்தி ஐரோப்பியருக்கு ஒருவிதமாகவும், இந்தியருக்கு இன்னொருவிதமாகவும், சீனருக்கொருவிதமாகவும் அந்தந்த நாட்டுக் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும் ஏற்றவிதத்தில் மாற்றிப் பிரசங்கிக்கப்படக் கூடாது. இதைத்தான் நூலாசிரியர் செய்ய முயற்சிக்கிறார். அவ்வாறு செய்வது தேவநிந்தனையைத்தவிர வேறில்லை.

### 3. வேதத்தைத் தவிர வேறெந்த நூல்களிலும் கிறிஸ்துவோ, கிறிஸ்தவமோ வெளிப்படுத்தப்படவில்லை.

உலகின் வேறெந்த மதங்களிலும் இயேசு கிறிஸ்துவைக் காணமுடியாது. கிறிஸ்துவின் வேதம் மட்டுமே அவரைப்பற்றி எடுத்துக் கூறும், கர்த்தரால் அருளப்பட்டுள்ள, பூரணமான தேவவார்த்தை. இந்து மத நூல்களில் கிறிஸ்தவத்தைக் காண முயற்சிப்பது கல்லில் நார் உரிக்க முயல்வது போலாகும். ஆதித்திராவிட சமயங்களுக்கும் கிறிஸ்தவ வேதத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. கிறிஸ்து தன்னை வேதத்தின் மூலமாக மட்டுமே வெளிப்படுத்துகிறார். வேதத்தைத் தவிர வேறெந்த நூல்களிலும், மதங்களிலும் கிறிஸ்துவைக் கண்டுகொள்ள முடியும் என்று போதிப்பவர்கள் கிறிஸ்துவின் எதிரிகளும், போலித்தீர்க்கதரிசிகளும் ஆவர். ஆகவே, வீண் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு மனதைக்குழப்பிக் கொள்வதைவிட வேதத்தைப்படித்து பரிசுத்த ஆவியின் வல்லமையால் கிறிஸ்துவை அறிந்து வரப்போகும் நியாயத் தீர்ப்பு நாளின் தண்டனையில் இருந்து தப்பிக் கொள்வது மேலானது.

### 4. கிறிஸ்தவம் இனச்சார்பற்றது.


இன்று எல்லா இனங்களுக்கும், சாதிகளுக்குமிடையில் ஒற்றுமையை உருவாக்கக் கூடியவர் கிறிஸ்து மட்டுமே. ஏனெனில் கிறிஸ்தவம் இனப்பாகுபாடற்றது. கர்த்தருக்கு முன் சகல இனங்களும் ஒன்றுதான். அவர் எந்த ஒரு இனத்தையும் மேலானதாகக் கருதுவதில்லை. கிறிஸ்து, தமிழருக்கும், பிராமணருக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், சிறுபான்மை மக்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் சொந்தமானவர். அதனால்தான் கிறிஸ்தவர்கள் இன, சாதிப்பாகுபாட்டை வெறுக்கிறார்கள். தமிழினத்திற்கென்று ஒரு கிறிஸ்தவ இறையிலை உருவாக்க முனைவது கிறிஸ்தவத்தை அழிக்க முனையும் "லிபரல்" கொள்கையாகும். ஓரினத்தை மேம்படுத்தி (அது தமிழினமாக இருந்தாலும் சரி) இன்னோரினத்தைத் தாக்குபவர்கள் உண்மைக் கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது. மெய் கிறிஸ்தவர்கள் எல்லா இனங்களையும் சமமாகவே பாவிப்பார்கள். ஒரு கொடியில் பூத்த மலர்கள் போல் கிறிஸ்தவர்கள் மற்ற இனங்களுடன் ஒற்றுமையுடன் வாழ்வர். அதற்குக் காரணம் கிறிஸ்து அவர்களது வாழ்க்கையில் செய்யும் அற்புதம்தான். எல்லா இனங்களையும் பாவத்தில் இருந்து விடுவிக்கக் கூடியவர் கிறிஸ்து ஒருவர் மட்டுமே. ஆகவே, கிறிஸ்தவத்தைப் பயன்படுத்தி பிராமணர்களைத் தாக்குவது வேதத்திற்குப் புறம்பான செயல். இதனையே நூலாசிரியர் செய்துள்ளார். இம்மாயமானின் வலையிலிருந்து கிறிஸ்தவர்கள் தம்மைக்காத்துக் கொள்ள வேண்டும்.

**விமர்சனம்**

**வேதத்தைத் தவிர வேறெந்த நூல்களிலும், மதங்களிலும் கிறிஸ்துவைக் கண்டுகொள்ள முடியும் என்று போதிப்பவர்கள் கிறிஸ்துவின் எதிரிகளும், போலித் தீர்க்கதரிசிகளும் ஆவர்.**

**கிறிஸ்தவம் தத்துவமோ அல்லது ஒழுக்கத்தைப்பற்றிய ஒரு வெறும் போதனையோ அல்ல. அது உறுதியான மாபெரும் வரலாற்று சம்பவங்களினதும், சத்தியங்களினதும் அடிப்படையில் அமைந்த விசுவாசமாகும். நமது ஆன்மீக அனுபவங்கள் இவற்றின் அடிப்படையில் அமைந்திராவிட்டால் அது கிறிஸ்தவமே அல்ல.**

– மார்டின் லொயிட் ஜோன்ஸ் –



# வில்லியம் கேரி

வில்லியம் கேரி

கர்த்தரிடமிருந்து பெருங்காரியங்களை எதிர் பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ் சாதனைகளைச் செய்யுங்கள்

## செராம்பூரில் கேரி

வட பெங்காலில் ஐந்தரை ஆண்டு காலம் இந்திகோ தொழிலில் அடைந்த அனுபவம், கேரியின் மிஷனரி ஊழித்திற்குப் பெரும் துணையாயிருந்தது. உள்ளூர் மக்களின் வாழ்க்கைமுறை, நடை உடை பாவனை பற்றிய அறிவை இதன் மூலம் கேரி பெற்றுக் கொள்ள முடிந்தது. சமஸ்கிருத மொழியையும் கேரி இக்காலத்தில் கற்றுக் கொண்டார். பெங்கால் அனுபவங்கள் கேரி இந்தியர்கள் மத்தியில் ஊழியம் செய்யவும், பிற்கால மொழி பெயர்ப்பு வேலைகள் அனைத் திற்குமான அத்திவாரத்தையும் இட்டன.

சித்தூர்பூருக்கு ஊழியத்தை மாற்ற எண்ணிய கேரியைத் தேவன் செராம்பூருக்கு வழிநடத்தினார். செராம்பூர் பிரதான சாலையில் அமைந்திருந்தது. கல்கத்தா விலிருந்து இரண்டு மணித்தியால பிரயான தூரத்திலிருந்தது. கவர்னர் பீயின் ஆளுகையின் கீழ் பெரும் சனத்தொகையையும், சுகாதார வசதிகள், அழகையும் கொண்டு நல்ல முறையில் அமைந்திருந்தது. நகரின் ஹூக்லி நதி, லண்டனின் தேம்ஸ் நதியைப் போல் விஸ்தாரமாக இருந்தது. பல தேசங்களைச் சேர்ந்த இருநூருக்கு மேலான கப்பல்கள் ஒரே நாளில் அதைக்கடந்து சென்றன. நகரில் டென்மார்க்கு தேசத்தார், ஜேர்மானியர், பிரெஞ்சு தேசத்தார், ஆங்கிலேயர், போர்த்துக்கேயர், ஆர்மீனியர், கிரேக்கர், சீக்கியர், இஸ்லாமியர், இந்துக்கள் என பல தேசத்து மக்கள் வாழ்ந்தனர். நகரில் கேரி அநேக தேச மக்கள் மத்தியில் பிரசங்கம் செய்ய முடிந்தது.

ஆனால், செராம்பூரில் ஊழியத்தை ஏற்படுத்துவது அவ்வளவு இலகுவான காரிய மாக இருக்கவில்லை. அம்மாகாணத்தில் ஏராளமான இந்துக்களும், இஸ்லாமி யர்களும் நிரம்பி வழிந்தனர். பிராமணர்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. இதுவே பூரிக்கு அடுத்தபடியாக ஜெகன்நாத சுவாமிக்கு பெரும் பக்தர்களைக் கொண்டுவரும் நகராக இருந்தது. ஏற்கனவே மொரேவியர்கள் இங்கு 1777 இல் சின்சென்டோர்பின் வழிநடத்தலின்படி ஊழியத்தை ஏற்படுத்த முயன்றுள்ளனர். பதினைந்து வருடங்களுக்குப்பின் 1792 இல் எந்தவிதப் பயனுமின்றி அவர்க ளுடைய ஊழியம் முடிவுக்கு வந்தது. இவ்வருடத்திலேயே இங்கிலாந்தில் கல்வி னீய பாப்திஸ்து மிஷனரி (Particular Baptist Mission) அமைப்பு ஏற்படுத்தப்பட் டது. மொரேவியர்கள் விட்ட இடத்திலிருந்து ஊழியத்தைக் கேரியும் நண்பர் களும் தொடர்ந்தனர். பெங்கால் அனுபவங்கள் செராம்பூர் ஊழியம் எந்தளவுக்கு கடுமையானதாக அமையும் என்ற பாடத்தைக் கேரிக்குக் கற்றுத்தந்திருந்தன.

கேரி மொரேவியர்களின் வழிமுறைகளில் சிலவற்றை ஊழியத்தில் பயன்படுத்திக் கொண்டார். மிஷனரிகள் குடும்பமாக இணைந்து வாழ்வது அவற்றில் ஒன்று. இது மிஷனரிகள் தனிமையில் வாடுவதைத் தவிர்த்தது. கேரி, வார்ட், மார்ஸ்மன் ஆகியோர் இனைந்து வாழ்ந்து ஊழியத்தில் ஈடுபட்டனர். இவர்களில் கேரியே வயதிலும் அனுபவத்திலும் மூத்தவராக இருந்ததால் அவரையே எல்லோரும் வழிகாட்டியாகக் கருதி அணுகினர். ஒரு காரியத்தில் மட்டும் கேரி மொரேவியர் களின் வழியைப் பின்பற்றவில்லை. மிஷனரிகளின் மத்தியில் ஒருவர் தலைவராக இருந்த நிலைமையை விடுத்து கேரி ஒரு ஜனநாயக அமைப்பாக மிஷனரிகளை செயல்பட வைத்தார். எல்லா முடிவுகளும் அனைவரையும் கலந்தாலோசிக்கப் பட்டே எடுக்கப்பட்டன. எல்லா வேலைகளையும் அனைவரும் பகிர்ந்து

கொண்டனர். இத்தகைய ஜனநாயக அமைப்பு முறையும், குடும்பமாக இணைந்து வாழும் முறையும் கேரியின் ஊழியத்தின் பலமான தன்மையாக இருந்தது. கேரியின் இத்தகைய சமயோசிதமான செயற்பாட்டினால் வழமையாக ஏற்படக் கூடிய அநேக பிரச்சனைகள் மிஷனரிகளின் மத்தியில் தவிர்க்கப்பட்டன.

மிஷனரிகள் அனைவரும் வேதத்தை மொழிபெயர்ப்பதையே தங்கள் முதல் நோக்கமாகக் கருதினர். தெளிவான பக்கங்களைத் திருத்தங்களுடன் தயாரிப்பது கேரி, பவுன்டன், கேரியின் மகன் பீலிக்ஸ் ஆகியோருடைய வேலையாக இருந்தது. பிரன்ஸ்டனுடைய உதவியோடு அச்சக வேலைகளை மேற்பார்வை செய்வது வார்ட்டினுடைய வேலையாக இருந்தது. அதன் பெரும் செலவுகளைத் தாங்கு வதற்காக ஜொசுவாவும், திருமதி ஹனா மார்ஸ்மனும் குழந்தைகளுக்கான ஒரு பாடசாலையை பணக்கார ஐரோப்பியர்களின் மத்தியில் ஏற்படுத்தினர். கூடிய விரைவில் இது பெங்காலிலேயே மிக பிரசித்தமான பாடசாலையாக மாறியது. அநேக பணக்கார ஐரோப்பியர்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டனர். கொலனல் லோரி எழுதுவது போல், ஏல்லோரும் தங்கள் மகன்களில் ஒருவரை யாவது செராம்பூருக்குப் படிக்க அனுப்பி வைத்தனர். பாடசாலை விரைவிலேயே நாற்பது குழந்தைகளை கொண்டு இயங்கி வருடத்திற்கு இரண்டாயிரம் பவுன் களை வருமானமாக அடைந்தது. இதைவிட மேலாக அநேக குழந்தைகள் இங்கு ஆன்மீக அறிவைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. பணம் கொடுத்துப் படிக்க வேண்டிய இத்தகைய பாடசாலையைவிட வருமானமற்ற இந்தியர்களுக்காக பணம் கொடுக்காமல் படிக்கக்கூடிய பெங்காலி ஆசிரியரைக் கொண்டு இயங்கிய பாடசாலையையும் மிஷனரிகள் நிறுவினர். இப்பாடசாலைகள் கேரிக்கு அதிக மகிழ்ச்சியைத் தந்தன. நொட்டிங்காமில் கேரி உதிர்த்த, "கர்த்தரிடமிருந்து பெருங் காரியங்களை எதிர்பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ் சாதனைகளைச் செய்யுங் கள்" எனும் வார்த்தைகள் மிஷனரிகளின் வாழ்க்கை இலட்சியமாக இருந்தன.

இவற்றிற்கு மத்தியில் கவர்னர் பீயின் துணை அவர்களுக்கு அதிக உற்சாகத்தை அளித்தது. மிஷனரிகள் பெங்காலியில் மொழிபெயர்த்த வேதத்தை அவரே முதலில் பெற்றுக் கொண்டதோடு, வார்ட், அரசாங்க அச்சகத்தைப் பயன்படுத் திக் கொள்ளவும் அவர் அனுமதியளித்தார். அத்தோடு டேனிஸ் (Danish) மக்கள் தங்கள் குழந்தைகளை மார்ஸ்மனின் பாடசாலைக்கு அனுப்புமாறும் அவர்களை உற்சாகப்படுத்தினார். கவர்னரின் அழைப்பை ஏற்று அவரது இல்லத்தில் மிஷ னரிகள் ஞாயிறு ஆராதனையை நடத்தினர். 1808 இல் டேனிஸ் சபை கட்டி முடியும்வரை இவ்வாராதனை இங்கு நடந்தது. ஐம்பது வருடங்களுக்கு மேலாக செராம்பூர் மிஷனரிகள் கவர்னரதும் அவரைச் சார்ந்தவர்களினதும், முழு ஐரோப்பிய சமுதாயத்தினதும் ஆன்மீக வாழ்க்கைக்கு அளவிட முடியாத நன்மை களை எவ்வித சன்மானத்தையும் பெறாமல் செய்து வந்தனர். அத்தகைய சேவை புரியும் சந்தர்ப்பமே அவர்களுக்கு எல்லையற்ற ஆனந்தத்தைத் தருவதாயிருந்தது.

1800 ஆம் ஆண்டு ஏப்பிரல் 24 ஆம் திகதி வியாழக்கிழமையை மிஷன் இல்லக் கட்டுமான வேலைகள் முடிவடைந்ததைக் குறிக்கும் கர்த்தருக்கு நன்றி கூறும் நாளாக மிஷனரிகள் நினைவு கூறினர். அன்றைய தினம் கேரி சபைப்போதகராக தெரிவு செய்யப்பட்டார். காலையில் ஜெபமும், சபைக்கூட்டமும் நடந்தது. மாலையில் கவர்னரது உரையோடு கேரியின் வல்லமையான பிரசங்கமும் நிகழ்ந்தது. அன்றைய தினத்தைப் பூரணப்படுத்தும்வகையில் இங்கிலாந்திலிருந்து கடிதங்கள் வந்து சேர்ந்தன. அவற்றில் கர்த்தருக்கு நன்றி கூறுமுகமாக ஸ்கொட் லாந்திலிருந்து ஹெல்டேன் சகோதரர்கள் அன்புக் காணிக்கையாக அனுப்பி யிருந்த 30,000 பவுன்களும் அடங்கும். அதே நாளில் தாகீத்திக்கு (Tahiti) மிஷனரி ஊழியத்தியத்திற்காகச் சென்ற டப் (Duff) பிடிபட்ட துக்கரமான செய்தியும் அவர்களை வந்தடைந்தது.


ஐரோப்பியர்கள் அனைவருமே கவர்னர் பீயைப்போல மிஷனரிகளை வரவேற்க வில்லை. பலர் மிஷனரிகளைப் பயித்தியக்காரர்கள் என்று வர்ணித்தனர். இதைக் குறித்து எழுதிய கேரி, ''பலரும் எம்மைத் தூற்றுகின்றனர் ஆனால், நாங்கள் இந்நாட்டில் கர்த்தருக்கான ஆலயத்தை எழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். அவரையே நாம் நம்பியிருக்கிறோம்.'' என்று குறிப்பிட்டார். இடையராது காலை யும் மாலையும் ஜெபித்து எந்த வேதத்தைப் பலருக்காகவும் மொழிபெயர்க்கும் பணியில் அயராது ஈடுபட்டிருந்தாரோ அவ்வேதத்தைத் தியானிப்பதிலும் அதிக நேரத்தைச் செலவிட்டார்.

**வில்லியம் கேரி**

***"பலரும் எம்மைத் தூற்று கின்றனர் ஆனால், நாங்கள் இந்நாட்டில் கர்த்தருக்கான ஆலயத்தை எழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கி றோம். அவரையே நாம் நம்பியிருக்கி றோம்."***
*- கேரி -*

## வில்லியம் கேரி

செராம்பூரை அடைந்த இரு மாதங்கங்களுக்குள்ளாகவே கேரி, பஞ்சனன், அவரது உறவினரான மனோகர் ஆகியோரைத் தனது மிஷனரி பணியில் ஈடுபடுத்திக் கொண்டார். மே மாதத்தில் பெங்காலி புதிய ஏற்பாட்டின் முதல் பக்கத்தை அவர் அச்சிட்டதோடு, அடுத்த ஒன்பது மாதங்கள் வார்ட், பிரன்ஸ் டன், பீலிக்ஸ் மற்றும் ஒரு இந்திய அச்சுக் கோப்பாளருடன் இணைந்து பெங்காலி புதிய ஏற்பாட்டினை அச்சிடுவதில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். அது மட்டுமல்லாது தினமும் தவறாது மூன்று முறை பிரசங்கம் செய்வதையும் கேரி தவறவிடவில்லை. குளிர்மையான காலங்களில் நான்கு முறை பிரசங்கம் செய்தார். கேரி பிரசங்கத்தின் வல்லமையில் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருந் தார். பிரசங்கம் செய்வதோடு எப்போதும் கைநிறைய துண்டுப்பிரசுரங்களையும் கொண்டு விநியோகிப்பதில் அவர் தவறவில்லை. எவரையும் சந்திக்கும்போது, ‘நண்பா, உனக்கு வாசிக்கத் தெரியுமா?’ என்று கேரி வினவுவார். அதற்கு, ‘எனக்குத் தெரியாது சாகிப்’ என்று பதில் வரும். ‘உன்னுடைய குடும்பத்தில் யாருக்காவது வாசிக்கத் தெரியுமா? என்று கேரி வினவுவார். அதற்கு, ‘இல்லை’ என்று பதில் வரும். ‘உன்னுடைய கிராமத்திலாவது யாருக்காவது வாசிக்க வருமா?’ என்று கேரி வினவுவார். ‘ஒருவரால் மட்டும் முடியும்’ என்று பதில் வரும். அப்போது கேரி, ‘அப்படியானால் இதை அந்த மனிதரிடம் கொடுத்து உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் வாசிக்கச் சொல்லு. இது இரட்சிப்பை அடைவதற்கான வழியைக் காட்டுகின்றது. உனது பாவங்களுக்கு எப்படி மன்னிப்புக் கிடைக்கும் என்று கூறுகிறது. இவ்வுலகிலும் மறு உலகிலும் நீ எப்படி ஆசீர்வதிக்கப்படலாம் என்று விளக்குகின்றது’ என்று கூறுவார். அவர்கள் அதைப் பெரும்பாலும், வியப்போடும் பயத்தோடும் பெற்றுக் கொள்வார்கள்.





# புதிய வெளியீடுகள்

### *திருச்சபை சீர்திருத்தம்*

இதுவரை திருமறைத்தீபத்தில் கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை என்ற தலைப்பில் தொடராக வெளிவந்த கட்டுரைகளை விரிவாக்கித் தொகுத்து திருச்சபை சீர்திருத்தம் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளோம். வாசகர்களில் பலரும் இவை நூலாக வெளிவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இதனை நல்ல முறையில் வெளியிட்டுள்ளோம். 72 பக்கங்கள் கொண்ட இந்நூல் திருச்சபை போதகர்கள், சபை மக்கள், ஊழியக்காரர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

### *சுவிஷேசக் கோட்பாடும் புதிய சுவிஷேசக் கோட்பாடும்*



இதுவும் திருமறைத்தீபத்தில் ஏற்கனவே கட்டுரையாக வெளிவந்தது. இபோது நூலுருவில் வெளிவந்துள்ளது. இன்றைய கிறிஸ்தவ உலகில் சுவிஷேசக் கோட்பாட்டாளர் போல் தோற்றமளித்து வரும் போலிகளை இனங்காட்டி, மெய்யான சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தின் அடிப்படை அம்சங்களை தெளிவாக எடுத்துரைக்கும் நூல்.

### *தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு*

திருமறைத்தீபத்தில் வெளிவந்த ஜேம்ஸ் அடம்ஸின் “தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு” எனும் கட்டுரை இப்போது நூல் வடிவம் எடுத்துள்ளது. கிறிஸ்து இலவசமாக வழங்கும் இரட்சிப்பை மனித முயற்சிகளின் மூலம் அடைய முயல்வோரின் செயல்களின் பின்னணியில் உள்ள தவறான இறையியல் போதனைகளையும், நடைமுறைகளையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் அடம்ஸ்.

இந்தியாவிலும், ஸ்ரீலங்காவிலும் உள்ள வாசகர்கள் ஒரு சிறு நன்கொடை அனுப்புவதன் மூலம் இம்மூன்று நூல்களையும் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய நாடுகளில் வாழ்பவர்கள் நியூசிலாந்து 15 டாலர்கள் (தபால் செலவு உள்ளடங்கியது) அனுப்பி இம்மூன்று நூல்களையும் பெற்றுக் கொள்ளலாம். வங்கிக் காசோலை அனுப்ப வேண்டிய முகவரி : Sovereign Grace Books, P O Box 62 159, Sylvia Park, New Zeland. email: bala@ihug.co.nz

*இந்நூல்களை வாங்கி சீர்திருத்தம் வளரத் துணை செய்யுங்கள்*

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

*கேள்வி 32: மகவேட்பு (Adoption) என்றால் என்ன?*

*பதில்: கர்த்தருடைய இலவசமான கிருபையால் அவரது மக்களின் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டு, கடவுளின் குழந்தைகளுக்குச் சொந்தமான அனைத்துப் பயன்களுக்கும் நம்மை உரிமையுடையவர்களாக்குவதே மகவேட்பு என்பது.*

*(1 யோவான் 3:1; ரோமர் 8:17)*

விளக்கக்குறிப்பு: நீதிமானாக்கப்பட்டபோதே ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆன்மீக ஆசீர்வாதங்கள் அனைத்தையும் கர்த்தரிடம் இருந்து பெற்றுக் கொண்டபோதும், படிமுறையாக அவற்றைப்பார்க்கும்போது மகவேட்பு (Adoption) நீதிமானாக்குதலுக்கு அடுத்த நிலையிலேயே காணப்படுகின்றது. அதற்குக் காரணம், கடவுள் நீதிமானாக்கப்படுவதற்கு முன்பு எவரையும் தனது குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளமாட்டார் என்பதுதான். ஆனால் விசுவாசிகள் தாம் விசுவாசிக்கும்போது, அதாவது, கிறிஸ்துவுக்குள் மறுபிறப்படையும்போது, நீதிமான்களாக்கப்படுகின்ற அதேவேளை கடவுளின் குழந்தையாகவும் ஒரே சமயத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆனால் மகவேட்பு என்றால் என்ன? இதற்கு பதில் கூறுமுன் ரோமன் கத்தோலிக்க மதமும், ஏனைய லிபரல் புரட்டஸ்தாந்து சமயக்குழுக்களும் போதிக்கும் "மனுக்குலத்தின் உலகளாவிய சகோதரத்துவம்" (the universal brotherhood of man) என்ற போதனைக்கும் இதற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்போதனை, மனிதர்கள் எல்லோரும் கடவுளால் படைக்கப்பட்டிருப்பதால் அவர்கள் எல்லோரும் கடவுளின் குழந்தைகளும், ஒருவருக்கொருவர் சகோதரர்களுமாவர் என்று கூறுகின்றது. இதில் ஓரளவிற்கு உண்மையிருக்கின்றது. அதாவது. கடவுள் எல்லோரையும் படைத்திருப்பது உண்மைதான். (அப்போஸ். 17:26). அதன் காரணமாக கிறிஸ்தவர்கள் மற்ற மனிதர்களின் மீது அன்பு செலுத்த வேண்டியதும் அவசியம். (லூக்கா 10:29; மத்தேயு 5). ஆனால் இதன் அடிப்படையில் நாம் கடவுளை அனைவருக்கும் பிதாவாகக்கருதி, உலகளாவிய சகோதரத்துவத்தையும் நியாயப்படுத்த முடியாது. ஏனெனில், எல்லா மனிதர்களும் ஆதாமோடு இணைந்து பாவம் செய்து பாவிகளாக கடவுளின் முன் தோற்றமளிக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கடவுளின் குழந்தைகளாகவும், அவரது அன்புக்குப் பாத்திரமானவர்களாகவும் தங்களைக் கருத முடியாது. இயேசு, தம்மை விசுவாசிக்காதவர்களைப் பார்த்து யோவான் 8:44 இல், நீங்கள் உங்கள் பிதாவான பிசாசானவனால் உண்டானவர்கள் என்று கூறினார். இதன் மூலம் இயேசு பாவியான மனிதர்கள் தமது குழந்தைகளல்ல என்பதைத் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

இதனாலேயே மனிதர்களில் ஒரு பகுதியினர் மட்டுமே கடவுளால் புத்திரசுவீகாரமெடுக்கப்பட்டு அவருடைய குழந்தைகளாகும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதை அறிந்து கொள்கிறோம். ஏனையோரைப்பற்றி வேதம், "இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத் தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களும்" (எபேசி. 2:12) என்று குறிப்பிடுகின்றது.

ஒருவர் கடவுளால் புத்திரசுவிகாரமெடுக்கப்படும்போது, அவர் கடவுளுடைய மீட்கப்பட்ட குடும்பத்தின் அங்கத்தவராக இடம் பெறுகிறார். இம்மகவேட்பின் மூலமாக ஒருவர் பாவத்தில் வீழ்ந்த மனுக்குலத்தில் இருந்து மீட்கப்பட்டு மீட்கப்பட்டவர்களின் ஐக்கியத்தில் கொண்டுவரப்படுகிறார். அதுமட்டுமல்லாது அம்மனிதர் மறுபடியும் ஒருபோதுமே கடவுளால் தள்ளிவைக்கப்படுவதில்லை.

***கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே திருமறைக்கல்வி என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவ கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்டின் லூதர், ஜோன் கல்வின் போன்றோர் இதன் அவசியத்தைப் பெரிதும் உணர்ந்திருந்தனர். சார்ள்ஸ் ஸ்பர்ஜன் 1889 இல் தன் சபை மக்களின் நன்மை கருதி இத்தகைய திருமறைக் கல்வி நூலை வெளியிட்டார். இதனையே இங்கு விளக்கக் குறிப்புகளுடன் வழங்குகிறோம்.***

## கோட்பாடுகள்

நாம் மகவேட்பைப்பற்றி சரிவரப் புரிந்து கொள்வதற்கு மேலும் சில உண்மைகளைக் கூர்ந்து நோக்க வேண்டும்:

1. மகவேட்பு என்பது ஒரு குறிப்பிட்ட கால நேரத்தில் நிகழும் செயலாகும். இது கடவுளின் செயல். ஒரே நேரத்தில் உடனடியாக கடவுளால் செய்யப்படும் ஒரு செயல்.

2. மகவேட்பாகிய அனுபவம் நிரந்தரமானது. ஒருமுறை கர்த்தரால் புத்திரசுவிகாரமெடுக்கப்பட்டவர்கள் அதனை மீண்டும் இழந்து போவதில்லை. (யோவான் 10:29). மகவேட்பாகிய அனுபவத்தைப் பெற்றவர்கள் கர்த்தரின் கையில் இருப்பதால் அவர்களைக் கர்த்தரிடம் இருந்து அகற்றும் வல்லமை எவருக்கும், சாத்தானுக்குக்கூட இல்லை.

3. மகவேட்பாகிய அனுபவத்தைப் பெற்றவர்கள் அதனைத் தம்மில் உணரமுடியும். கர்த்தர் நம்மைத் தமது குழந்தைகளாக ஏற்றுக்கொள்வது மட்டுமல்லாமல் நாம் அதை உணரும்படியாகவும் செய்கிறார். (கலா. 4:6; ரோமர் 8:16).

ஆனால், நாம் அவரது குழந்தைகளென்பதை கடவுள் நம்மை எவ்வாறு உணர வைக்கிறார்? அதாவது, வேதம் கூறுவதுபோல் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூட எவ்வாறு சாட்சி கொடுக்கிறார்?

1. நமது ஆவியும், பரிசுத்த ஆவியும் இணைந்து ஒரே சமயத்தில் கொடுக்கும் ஒரே சாட்சியின் மூலமே நாம் இதனை அறிந்து கொள்கிறோம்.

2. வேதம் அளிக்கும் சாட்சி உண்மையில் பரிசுத்த ஆவியின் சாட்சியே. பரிசுத்த ஆவியின் சாட்சியை நாம் வேத்தின் மூலமே அறிந்து கொள்ள முடியும். ஆவியின் சாட்சி வேதத்தோடு ஒத்துப்போகாவிட்டால் அது பரிசுத்த ஆவியின் சாட்சியாக இருக்க முடியாது.

3. வேதம் மெய் கிறிஸ்தவர்களைப்பற்றிக் கூறும் சத்தியங்களை நாம் அறிந்து கொள்ளும்படி கர்த்தர் நம்மை வழிநடத்தும்போதே ஆவியானவர் நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுப்பதை நாம் அனுபவபூர்வமாக உணர முடியும். உதாரணமாக, கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் அழிந்து போகாமல் நித்திய ஜீவனைப்பெற்றுக் கொள்வார்கள் என்று வேதம் போதிக்கின்றது. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று கர்த்தரின் வழிநடத்தலின்படி என்னால் கூற முடியுமானால் நான் கர்த்தரின் குழந்தை என்பதை உணரும்படியான இந்த சாட்சி என்னிடம் உண்டு.

மகவேட்பாகிய இக்கோட்பாட்டைப்பற்றி நாம் படிக்கும்போது, இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவத்திற்கும், நமது குமாரத்துவத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து தேவனுடைய நித்திய குமாரனாக இருக்கிறார். அவர் கர்த்தருடைய ஒரே பேரான குமாரன். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிதா, ஆவி ஆகியோருடன் அவர்களுடைய தன்மையிலும், மகிமையிலும், வல்லமையிலும் சமபங்கு கொண்டவராக தெய்வீகத்தன்மை கொண்டு காணப்படுகின்றார். ஆகவே, இயேசு கிறிஸ்து கடவுள். ஆனால் நம்மைக் கர்த்தர் புத்திரசுவிகாரமெடுக்கும்போது நாம் தெய்வீகத்தன்மை அடைவதில்லை. இயேசு கிறிஸ்துவுக்கு பிதாவுடன் இருக்கும் சமத்துவத்தில் நாம் பங்கு பெறுவதில்லை. ஆகவே, நாம் என்றுமே கடவுளால் படைக்கப்பட்டவர்களாகவே இருப்போம். எனவே, நமது மகவேட்பாகிய ஆசீர்வாதம் எல்லாவிதத்திலும் நம்மைக் கிறிஸ்துவைப்போல் மாற்றுவதில்லை.

இருந்தபோதும் இது நமது மகவேட்பை எந்தவிதத்திலும் குறைவுபடுத்துவதில்லை. நாம் படைக்கப்பட்டவர்களாயிருந்தபோதும் கர்த்தரின் குழந்தைகளாய் கிறிஸ்துவின் ஆசிர்வாதங்கள் அனைத்திலும் பங்குகொள்ளும் உரிமையைப் பெற்றுக் கொள்கிறோம். படத்தின் ஆவி நம்மிடமிருந்து முற்றுமாய் அகற்றப்பட்டு கிறிஸதுவுக்குள்ளாக நாம் கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறோம். ஆகவே, இம்மகவேட்பாகிய கர்த்தரளிக்கும் ஆசீர்வாதம் நம்மை எவரும் கர்த்தரிடமிருந்து பிரிக்க முடியாதபடிச் செய்கிறது. மெய் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை எப்போதுமே இழக்க முடியாது.


***சத்தியத்தை மறைப்பது அசத்தியத்தைப் பிரசங்கிப்பதற்கொப்பான கண்டனத்திற்குரிய, தகுதியற்ற செயலாகும்.***


*— மார்டின் லொயிட் ஜோன்ஸ் —*













## உள்ளே . !

1. பழைய ஏற்பாட்டிலிருந்து...
2. பழைய ஏற்பாடு
3. வியாக்கியானப் பிரசங்கம்
4. 6 அறமான விதி முறைகள்
5. கேள்வி?- பதில்!
6. கிருபையின் கோட்பாடுகள்
7. இந்து மதத்தில் கிறிஸ்தவம்?
8. வில்லியம் கேரி
9. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

சவரின் கிரேஸ் சபை மக்களில் சிலர் பத்திரிகையை முத்திரை ஒட்டி அனுப்பி வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதைக் காட்டும் சில புகைப்படங்கள்.